Registered as a Newspaper பக்கங்கள் 14 விலை ரூபா 6·00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

## சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

1994 டிசம்பரில் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்தமாதம் 18-ம் திகதி என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. இப்பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சைத் திணைக்களத்திற்கும் பாடசாலைப் பரீட்சார்த்திகள் பாடசாலை (13-ம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 10 24-06-94 வெள்ளிக்கிழமை ஓசை 126

# காபந்து அமைச்சரவைக்கு காமினி தலைவராக இருப்பார்?

## பாராளுமன்ற பொதுத் தேர்தல் ஆகஸ்ட் 15 இல் நடைபெறும்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றம் இன்று நள்ளிரவு விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கலைக்கப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து செயற்படவுள்ள காபந்து அமைச்சரவைக்கு மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்கா தலைமை தாங்குவார் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏ. எப். பி. செய்திகள் தெரிவிக்கின்றன. இதேசமயம், ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் இடம் பெறவுள்ளதாகஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளர் காமினி விஜேசேகரா தெரிவிததாக இந்திய வானொலி அறிவித்தது.

இதேசமயம் பாராளுமன்றம் கலைப்புத் தொடாபாக பல அமைச்சர்களுடனும் தமது ஆலோசகர்களுடனும் டி.பி. விஜேதுங்கா தீவிரமாக ஆலோசனை நடத்தி வருவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் சபாநாயகர், பிரதி சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ''கபினற்'' அந்தஸ்தற்ற அமைச் (14ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை பின்போடுமாறு கேட்கப் போவதில்லை

### எதிர்க்கட்சிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தலைப் பின்போடுமாறு தாம் எந்தக் கட்டத்திலும் கேட்கப்போவதில்லை எனவும் தாம் தேர்தலைச் சந்திக்க எந்த நேரமும் தயாராக இருப்பதாகவும் சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பதினேழு ஆண்டுகள் மக்கள் பட்ட கஷ்டங்கள் நீக்குவதற்கு விரைவில் வழி பிறக்குமென தாம் நம்புவதாகவும் எனினும் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெற சகலரும் ஒத்துழைப்பார்கள் என தாம் நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## ஜனாதிபதியின் முடிவு தீர்க்கதரிசனமானதல்ல

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா எடுத்துவரும் முயற்சி தீர்க்க தரிசனமானதல்ல என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இவரின் இம் முயற்சி ஐக்கிய தேசியக்கட்சியை மேலும் பலவீனப்படுத்தவே உதவும். பாராளுமன்றத்தை அதன் ஆயுட்காலத்துக்கு முன்னர் கலைக்கும் முழுமையான அதிகாரம் ஜனாதிபதியிடம் உண்டு. பாராளுமன்றம் கலைக்கபட்டு மூன்று மாத காலத்தினுள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவே பாராளுமன்ற தேர்தல் மிகுந்த சிரமமான கால கட்டததிலேயே நடத்தப்படுகிறது என்பதை மறுக்க முடியாது என அரசியல் அவதானிகள் மேலும் கூறுகின்றனர்.

## வலி வடக்கு பகுதியில் விமானத் தாக்குதல்

### குடியிருப்புகள் பல சேதம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி, பண்டத்தரிப்பு மற்றும் பெரிய விளான் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப் படையினர் பலத்த குண்டுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். நேற்று அதிகாலை முதல் நடாத்தப்பட்ட இத் தாக்குதல்கள் காரணமாக பொதுமக்களின் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

(13ஆம் பக்கம் பார்க்க)

## எம். பிக்கள் மீதான சந்தேகமே பாராளு. தேர்தலுக்கு காரணமாம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை முன்னர் நடத்தினால் சில அமைச்சர்களும், உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்கமாட்டார்கள் என கிடைத்த இரகசியத் தகவலை தொடர்ந்தே ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பாராளுமன்ற தேர்தலை முன் நடத்த தீர்மானித்திருப்பதாக தெரியவருகின்றது.

ஒத்துழைப்பு இல்லாத நிலையில் ஜனாதிபதி தேர்தலில் டி. பி. விஜேதுங்காவுக்கு நிச்சயம் தோல்வியே கிடைககும் என்றும் இத் தோல்வியிலிருந்து தப்பிப் பிழைத்து கொள்ளும் முகமாகவே இந் நடவடிக்கையில் ஈடுபடுமாறு ஜனாதிபதி ஆலோசகர்கள் ஆலோசனை வழங்கியதாகவும் இதனைத் தொடர்ந்து இவர் இம் முடிவுக்கு வந்துளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தோல்வியில் இருந்து தான் தப்பிப் பிழைத்துக் கொண்டால் உடனடியாக ஜனாதிபதி தேர்தலை நடத்தி தனது வெற்றியை உறுதி செய்யவே இந் நடவடிக்கை எடுத்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் நேற்று முன்தினம் பலமணி நேரச்சந்திப்பொன்று இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில்ஜனாதிபதியின் செயலாளரும்தேர்தல்ஆணையாளரின் செயலாளரும் உடனிருந்ததாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(13ஆம் பக்கம் பார்க்க)

## விளான் பகுதியில் நேற்று மோதல் வெளியேறிய ராணுவம் திருப்பியது

விளான் பகுதியில் நேற்று முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழி மறித்துத் தாக்குதலை மேற்கொண்டனர். காலை 6. 00 மணியளவில் சிறிலங்கா இராணுவக் காவலரணிலிருந்து 800 மீற்றர் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. முன்னேறி வந்த படையினருக்கு உதவியாக சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரு சியாமாசெட்டி விமானங்களும் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. பின்னர் 7 30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் முகாம் திரும்பி விட்டனர்.

இம் மோதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

## ஜனாதிபதியின் முடிவுக்கு ஐ.தே.கவில் பலர் ஆட்சேபம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைக்கும் டி. பி. விஜேதுங்காவின் முடிவினை ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஆட்சேபித்து இருப்பதாக தெரியவருகிறது.

முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறும் அதற்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர்கள் ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவிடம் உறுதியளித்தனர்.

ஆனால் தனது முடிவு (13ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## வரி விளம்பரம்

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, வீடு, கை பார்த்தல், அதிர்ஷ்ட எண் மாற்றம் ஆகியவற்றிற்கு ஜோதிடரைத் தினசரி காலை முதல் மாலை வரை 140, செல்லர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம். (8611)

### ஏழு தலைமுறைகள்

வெள்ளையர்கள் புரிந்த கொடுமைகளுக்கும் அக்கிரமங்களுக்கும் எதிராக கறுப்பின அடிமைகள் நடத்திய போராட்டத்தையும், கறுப்பின மக்களின் கலாசாரத்தையும் விபரிக்கும் நாவல் விற்பனையாகிறது- வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில். (8567)

### தவறி விட்டது

இடது பக்க பொய்க்கால் ஒன்றுசாவகச்சேரிக்கும்யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதை யாராவது கண்டெடுத்தால் கீழ்க்காணும் முகவரிக்குஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். செ.விக்னேஸ்வரன் சரசாலை தெற்கு, திலீபன் வீதி, சாவகச்சேரி. (8634)

### 'கவிதை' - இதழ்

இளைஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவருகிறது; கவிஞர் சோ. பத்மநாதனின் 'கவிதைக் கலை' என்ற அரிய தொடர் கட்டுரையுடன் ஆனி - ஆடி இதழ் விற்பனையாகிறது! தனி இதழ் ரூபா 15/- (8640)

### ஞான வைரவர் பொங்கல்

நவாலி வடக்கு தேற்றா மரத்தடி ஸ்ரீ ஞான வைரவர் கோயில் பொங்கல் இன்று பகல் 2.00 மணி அளவில் நடைபெறும். அன்று விசேட அபிசேகமும் நடைபெறும்.

---

நிறைவான 3-ம் ஆண்டினில் (24-06-94)

# யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தமது மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், 4-ம் ஆண்டிலும் நல் ஆதரவினை எதிர்பார்த்து, சேவையினைத் தொடர்கின்றது.

## யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்

அனைத்துப் பொருட்களையும் தரமாகவும் நிறைவாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்.

அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9862)

---

## நினைவு கூருகின்றோம்...
## 24 06-1994

1987-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-கிரான் குளம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**அம்மாச்சி** (முத்துக்குட்டி செல்லத்துரை-கிரான் குளம்-மட்டு)

இதேதினம் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ் வயோதிபப் பெண்.

1988-ம் ஆண்டு மட்டு-ஊறணிப்பகுதியில் தேசவிரோதசக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**உதயன்** (ச.இன்பராஜ்-மாமங்கம்-மட்டு)

1989-ம் ஆண்டு கிளி-திருநகர்ப்பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப்.டானியல்** (அந்தோனிப்பிள்ளை இரத்தின கோபால் கனகராயன்குளம்-வவுனியா)

யாழ்-சுன்னாகம் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கைதுசெய்யப்பட்டு. சித்திரவதை செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினரான,

(இராமநாதன் கணேஸ்குமார் - - -)

1990 ம் ஆண்டு யாழ்-பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ரதீஸ்** (கிருஷ்ணபிள்ளை ஜெகநாதன்-மாலிசந்தி, புலோலி, பருத்தித்துறை-யாழ்)

கிளிநொச்சி-பரந்தனில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்,

1993-ம் ஆண்டு வன்னி மாவட்ட கிளிநொச்சியில் தவறுதலாக ஏற்பட்ட விபத்தில் வீரச்சாவெய்திய,

**நித்தியானந்தன்** (கந்தசாமி தர்மலிங்கம்-புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-9868)

---

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயப்

## பூங்காவனத் திருவிழா விஞ்ஞாபனம்

காலம்: 24 - 06 - 1994 வெள்ளிக்கிழமை

மாலை 4 மணியளவில் விசேட பூசையுடன்
பூங்காவனத் திருவிழா ஆரம்பமாகும்.

இரவு கலை நிகழ்ச்சிகளாக

7 மணிக்கு "இந்தமண் எங்களின் சொந்தமண்" புகழ் இன்னிசை வேந்தன் S. G. சாந்தன் இசைக் குழுவினரின் இன்னிசைக் கானங்கள்.

11 மணிக்கு இசைத்தென்றல்

அருணா இசைக் குழுவின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூங்காவனத் திருவிழா
உபயகாரர்கள்.

(8632)

---

## மாற்குவின் வண்ணங்கள்

ஓவியர் திரு. அ மாற்கு அவர்களின்
மணிவிழா ஆண்டு

நிறைவையொட்டி ஓவியக்கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது. மாற்குவின் கைவண்ணங்களில் திறமானவைகள் பார்வைக்கு வருகின்றன.

இடம்: யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி).

காலம்: 25, 26 (சனி, ஞாயிறு) -06-1994

நேரம்: காலை9.00மணி-மாலை5.00மணி

குறிப்பு: 25-06-94 பிற்பகல் 3.00 மணிக்கு ''நவீன ஓவியத்தை ரசித்தலும் புரிந்து கொள்ளலும்'' என்ற விடயம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும்.

26-06-94 காலை 10.00மணிக்கு ''யாழ்ப்பாணத்தில் ஓவியக் கலை வளர்ச்சி'' பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும்.

பிற்பகல் 4-00 மணிக்கு
ஓவியர் திரு. அ.மாற்கு அவர்களைக்
கௌரவிக்கும் வைபவம் இடம்பெறும்.

(சி-9871) விழா ஒழுங்கமைப்பாளர்கள்

# கணனிகள் விடும் சிறு தவறுகள் கூட பாரதூரமான விளைவை ஏற்படுத்தலாம்

1980 ஜூன் 3 அமெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்பு பின்னலின் முக்கிய கணனி ஒரு அறிவிப்பை விடுக்கிறது. வட அமெரிக்காவைநோக்கி சோவியத்தின் அணுஆயுதஏவுகணையொன்று புறப்பட்டுவிட்டதாகவும் உடன்நடவடிக்கை எடுக்கும் படியும் அந்த அறிவிப்பு கூறுகிறது. பரபரப்படைந்த பாதுகாப்பு அதிகாரிகள்விரைந்து தாக்கும் விமானப்படையணிக்கு எச்சரிக்கை விடுக்கின்றனர். வரும் ஏவுகணையை அழிக்கமட்டுமல்ல சோவியத் அணு ஆயுதக்கேந்திரங்கள் மீது தாக்குதல் நடத்த தயாராகுமாறும் அந்தஅறிவிப்பில் கூறப்படுகிறது.

ஆனால் இவ்வாறான ஏவுகணைகளை கண்டுபிடித்துமுன்னெச்சரிக்கை விடுக்கும் நவீன அமைப்பு மௌனமாக இருப்பது அவர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. அந்த முன்னெச்சரிக்கை அமைப்பின் கணனிக்கு இந்த ஏவுகணையைத் தேடிக்கண்டு பிடிக்குமாறு கட்டளை பிறப்பிக்கப் படுகிறது. ஆனால் அவ்வாறான ஏவுகணைஎதுவும் வான் பரப்பில் இல்லை என முன்னெச்சரிக்கை அமைப்பு திட்டவட்டமாக அறிவிக்கிறது.

எதனை நம்புவது என்பதில் பாதுகாப்பு அதிகாரிகளிடையே குழப்பம். ஆனால் குழப்பத்திற்கு உடனேயே விடை கிடைக்கிறது. பிரதானகணனி அறிவித்த நேரத்திலிருந்துகடந்த நேரத்தைப் பார்க்கும் போது சோவியத் ஏவுகணை தனது இலக்கை அடைந்திருக்க வேண்டும். ஆனால் வட அமெரிக்கா அமைதியாகவே இருக்கிறது. இதிலிருந்து பிரதான கணனியின் தவறு பாதுகாப்பு அதிகாரிகளுக்குபுரிந்து விட்டது. பின்னர் அவர்கள் ஆராய்ந்து பார்த்ததில் பிரதான கணனி ''களைப்படைந்து'' இருந்தமை தெரியவந்தது.

கணனிகள் எவ்வளவிற்கு துல்லியமாக இயங்கக்கூடியவையோ மறுவளமாக அவ்வளவிற்கு பாரதூரமான தவறுகளை விடக்கூடியவை. பிரதான கணனியின் எச்சரிக்கையை மட்டும் எடுத்துக் கொண்டு அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தால் அன்று உலகில் பெரும் அணு ஆயுத யுத்த மொன்று ஏற்பட்டிருக்கும்.

கணனிகளின் தவறுகளுக்கு பல்வேறு காரணங்கள் உள்ள போதும் கணனியை இயக்குபவர் விடும் தவறுகள் பாரிய விளைவை ஏற்படுத்தக் கூடும் எவ்வளவு திறமை மிக்க கணனிகளானாலும் அவை மனிதனாலே உற்பத்தி செய்யப் பட்டு மனிதனாலேயே இயக்கப் படுபவை கணனிக்கு தவறான தரவுகள் வழங்கப் பட்டாலோ அல்லது அதற்கு தவறான கட்டளைகள் கொடுக்கப்பட்டாலோ அவற்றால் தவறான முடிவுக்கே வரமுடிகின்றது. மேலும் கணனிகளை உருவாக்கும் போது விடப்படும் சில தவறுகள் சில சந்தர்ப்பங்களில் மட்டும் கணனியை பிழையான வழிக்கு இட்டுச்செல்லக் கூடியவையாக உள்ளன. இதனால் அவை பிழையான முடிவுகளை தரும் சந்தர்ப்பங்களை அறிவது கடினமாகிறது. அத்துடன் அவை பாரதூரமான விளைவுகளை உருவாக்குபவையாகவும் இருக்கக்கூடும்.

இன்றைய உலகம்கணனிகள் சகலஇடங்களிலும்சகல அலுவலகங்களிலும் முக்கியபங்கை வகிப்பனவாகஉள்ளன. பொதுவாக கணனிகள் தவறே செய்யமாட்டா என்பதே அனைவருடைய நம்பிக்கையும். ஆனால் மின்சாரத்தில் ஏற்படும் சிறு 'தடுமாற்றம்' கணனிகள் பிழையான முடிவுகளை எடுப்பதற்கு தூண்டுகோலாக அமையமுடியும். கணனியின் பிரதான செயற்பாடாக ''தரவுகளைச் சேமித்து வைப்பது'' இருக்கின்ற வேளையில் மின்சாரத்தில் ஏற்படும் கணப்பொழுதுத் தடையானது கணனிகளில் வருடக்கணக்கில் சேமித்து வைத்திருந்த தரவுகளை அழித்து விடவும் கூடும்.

**சி. சிவபாலன்**

இன்று வணிகத்துறை ஏறத்தாழ கணனி மயப்படுத்தப் பட்டுவிட்டதென்றே கூறமுடியும். வணிகத்துறையில்தொடர்புகள் முதல் கணக்கு வைப்பு வரை பேனா, காகிதம் இன்றி சகல விடயங்களையும் கணனி மூலம் கவனிக்க முடியும். முக்கியமாக பணக்கொடுக்கல் வாங்கல் கணனிமயப்படுத்தப் பட்டுவிட்டது. இந்நிலையில் கணனிகள் தவறுகளின்றி இயங்கவேண்டியது அவசியமாகிறது. இத்துறையில் கணனி விடக்கூடிய பிழையானது பெரும் பணநட்டத்தை ஏற்படுத்தக்கூடியது மட்டுமன்றி கொடுக்கல் வாங்கல் செய்பவர்களிடையே சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தி அந்நிறுவனத்திற்கே கெட்ட பெயரை ஏற்படுத்தும். எனவே இவற்றைத் தடுப்பதற்குக்கூட கணனிகளில் பல்வேறுபட்ட அமைப்புகள் பொருத்தப்படுகின்றன. எனினும் ஒரு 'திறமை' வாய்ந்த கணனி நிகழ்ச்சித் தயாரிப்பாளரால் கணனிகளை ஏமாற்றி பெரும் மோசடிகளைச் செய்ய முடியும்.

சுவிற்சிலாந்திலுள்ள வங்கியொன்றின் முகாமையாளர் ஒருவர் தனது கணனி அறிவை வைத்துக் கொண்டு வங்கியின் பணத்தின் 90 சதவீதத்தை மோசடி செய்தமையை இறுதி நேரத்திலேயே கண்டுபிடிக்க முடிந்தது.

பல கோடிக் கணக்கான பணத்துடன் புழங்கிய இவ் வங்கி முற்றாக முறிவடையும் வரை வாடிக்கையாளருக்கோ நிர்வாகத்தினருக்கோ எதுவித சந்தேகமும் ஏற்படாமைக்குகணனிகளில் அவர்கள் வைத்திருந்த அதீத நம்பிக்கையே காரணமாக அமைந்தது.

மேலும் சிறிய பண மோசடிகளைக்கூட மிகச்சுலபமாகச் செய்யக் கூடியவர்கள் ஐரோப்பிய நாடுகளில் சர்வசாதாரணமாக காணப்படுகின்றனர். வங்கி பணக் கைமாற்றம், தொலைபேசி, பொருள் கொள்வனவு என்பன உட்பட அன்றாட செயற்பாடுகள் அனைத்தும் நேரடியாகவே கணனிகளுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளக் கூடிய நிலை இன்று ஏற்பட்டுள்ளதால் கணனிகளை ஏமாற்றும் பேர்வழிகளிடமிருந்து தப்பிக் கொள்வது சிரமசாத்தியமாகவே உள்ளது,

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தால்போல அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான ''நாசா''வின் இரகசிய தகவல்கள்பலகணனி மூலம் வீட்டிலிருந்தபடியே ஒருவரால் திருடப்பட்ட சம்பவம் கணனி ஆராய்ச்சியாளர்களிடையே பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.

வழமையாக இத்தகவல்களைப் பெறுவதற்கு இரகசிய சொற்கள் அல்லது எண்களைப் பயன்படுத்த வேண்டும் ஆனால் கணனியில் உள்ள சிறுபலவீனத்தைப் பயன்படுத்தி இவ்வாறான மோசடிகள் திருட்டுக்களில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பெரும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆயினும் இவற்றைத் தடுப்பது தொடர்ந்தும் கடினமான காரியமாகவே உள்ளது.

# கணித பாடத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திவரும் கணித மூலவள நிலையங்கள்

வடக்கில் மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து காணப்படுவது வெளிப்படையாக அமைந்துள்ள போதிலும் கல்வித் துறையிலேயே மிகவும் இன்றியமையாததாக அமைய வேண்டிய கணித பாடத்தில் தேர்ச்சியடையும் மாணவர் தொகை மிகமிகக் குறைவாக அமைந்துவிட்டமை அனைவரது நெஞ்சங்களையும் பிழிந்துவிட்ட ஒரு செய்தியாகும்.

இதனை மாற்றி அமைத்து கணிதத்திலே சகல மாணவர்களும் கைதேர்ந்து விளங்க வழிகாட்டியாக அமைந்து நிற்கின்றது கணித மூலவள நிலையங்கள். கணிதபாடத்திலே வெறுப்படைந்திருந்த மாணவர்கள் அதனை விருப்புடன் பயில்கின்ற அளவிற்கு கல்வியிலே நம்பிக்கை ஒளியை ஏற்றியுள்ளது இந்த கணித மூலவளநிலையங்கள்என்றால் அது மிகையாகாது.

1992 ஆம் ஆண்டில் கோப்பாய் வட்டத்தில் இந் நிலையம் முதல்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாடசாலைகள் தோறும் இந் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வகையில் பாடசாலை ரீதியாக முதலாவது கணித மூலவள நிலையம் உடுவில் மகளிர் கல்லூரியில் ஆரம்பிக்கப் பட்டு செயற்பட்டு வருகின்றது. இதன் முதலாவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது ஆசிரியர் மாணவர்களை சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இக் கணிதமூலவள நிலைய பொறுப்பாளரான ஆசிரியர் திரு. சதீஸ்குமாரை சந்தித்த போது நாம்பல வருடங்களாக மாணவர்களுக்கு கணித பாடத்தினை மிகவும் கஷ்டப் பட்டு கற்பித்து வந்தபோதிலும் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. கணிதபாடத்தினை என்ன வகையிலே மாணவர்மத்தியில் இலகுவாகப் புகுத்தலாம் என்பது குறித்து பலகாலமாகச் சிந்தித்து வந்தோம். ஒருநாள் பத்திரிகையிலே காணப்பட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையம் அங்குரார்ப்பண விழாச் செய்தியை அடுத்து கணித ஆசிரியர் என்றவகையில் அதனைப் பார்ப்பதற்காகச் சென்றேன்.

> கணித பாடத்திலே மாணவர்கள் சித்தியடைவது பெருமளவில் குறைந்து வருவதாக பல கல்விமான்களும் சுட்டிக்காட்டி வரும் வேளையில் இதற்கு சவாலாக அமைந்துவிடும் அளவிற்கு கணித மூலவள நிலையம் விருட்சம் பெற்றுவிட்டது. இதன் மூலம் கிடைத்த பலனை உருவாக்கியவர்கள் சொல்வதை விட அனுபவித்த மாணவர்கள் பெருமிதம் கொள்வதிலிருந்து புரிந்து கொள்ளமுடிகிறது.

அங்கே மாணவர் கற்பதற்குத் தேவையான சகல கல்வி உபகரணங்களும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்கு பொறுப்பாக இருந்தவர்களை அணுகி அவை ஒவ்வொன்றையும் பற்றி கேட்டும், பரீட்சித்தும் பார்த்தேன். என் சிந்தனைகளுக்கு அன்றுபதில்கிடைத்து விட்டது.

எனது மாணவர்களையும் கணிதத்திலே சிறந்த நிலையை அடையச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. எனது திட்டத்தினை அதிபரிடமும் சக ஆசிரியர்களிடமும் எடுத்துரைத்தேன். மாணவர் கல்வியே தனது இலக்காக கொண்டு இயங்கி வரும் எமது கல்லூரி அதிபர் தனது பூரண ஒத்துழைப்பை நல்க முன் வந்தார். கடந்தவருடம் யூன் மாதமளவில் இந் நிலையத்தினை உருவாக்கினோம்.

இங்கு காணப்படும் அனைத்து உபகரணங்களும் மாணவர்களாலேயே உருவாக்கப் பட்டன. இவை ஒவ்வொன்றையும் உருவாக்குதல் தொடர்பான ஆலோசனைகளை மட்டுமே தேவை ஏற்படும் போது நாம் வழங்கி வந்தோம் உண்மையிலேயே நாம் வழங்கிய ஆலோசனைகளை விட மாணவர்கள் அவற்றுக்குக் கொடுத்த செயல்வடிவங்கள் மிகச்சிறப்பாக அமைந்துள்ளன.

இந்த நிலையத்தை ஆரம்பித்த ஓராண்டுக்குள்ளேயே மாணவர்கள் நாம் எதிர்பார்த்ததைவிட சிறந்த பெறுபேறுகளை கணித பாடத்திலே பெற்றுள்ளனர். பின் வாங்கிலே இருக்கும் பிள்ளைகள் கூட மிகுந்த உற்சாகத்துடன் இப் பாடத்தினைக் கற்று வருவதை ஆசிரியர் என்றரீதியில் நான் உணரக் கூடியதாகவுள்ளது.

இந்தநிலையத்தினை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்துவார்களேயானால் எதிர் காலத்தில் கணிதபாடத்தில் சித்தியடைவோர் தொகை மிகக்குறைவு என்ற பேச்சுக்கே இடமில்லாது போய்விடும்.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதற்கு இணங்க எமது கல்லூரிக்கு அண்மையில் உள்ள கல்லூரி மாணவர்களுக்கும் இந் நிலையத்தினை பயன்படுத்துவதற்கு எமது அதிபர் தனது அனுமதியை வழங்கியுள்ளார். அவரது இத்தகைய பெருந்தன்மை ஏனைய கல்லூரி மாணவர்களையும் ஊக்குவிக்கும் என நம்புகிறேன் என்றார்.

கல்லூரி மாணவிகள் சிலரை அணுகிய போது கணித பாடம் என்றாலே ஒருவித பயம் தோன்றும் அப்பாடம் எப்போ முடியும் என மணி ஒலிக்காக காத்திருந்த எங்களுக்கு இப்போ மணி ஒலிக்கப்போகிறதே என்ற ஏக்கமே காணப்படுகிறது சகலபாடங்களுடனும் ஒப்பிடும்போது மிகவும் குறைந்த புள்ளியே இப்பாடத்திற்குக் கிடைக்கும் எத்தனை தடவை முயற்சித்தாலும் கூடுதலான புள்ளிகளை ஏன் சித்திப்புள்ளியைக் கூட எங்களால் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. கல்வி நிலையங்களுக்கு சென்றாலும் இதேநிலையே காணப்பட்டது

இப்போ இந்த மூலவள நிலையம் அமைந்தது ஓர் வரப்பிரசாதம் என்றே எண்ணி மகிழ்கிறோம். பாடத்தை ஆரம்பித்து ஆசிரியர் கரும்பலகையிலே எமக்கு அவற்றை விளக்குவார். அதன் பின்பு எம்மை இங்கு அழைத்து வருவார் குறிப்பிட்ட பகுதியுடன் தொடர்புடைய உபகரணங்களை எடுத்து வைத்து அதன் செயற்பாடுகள் குறித்தவிளக்கத்தினை வழங்குவார். பின்பு நாம்ஒவ்வொருவராகஅதனை அமைத்து பார்த்து மனதில் நிறுத்திக்கொள்வோம்.

**சந்திப்பு - சசீகரன்**

சொல்லப்போனால் முப்பரிமாணத் தோற்றப்படங்களை கருமபலகையிலே வரைந்தால் எமக்கு தலையே சுற்றிவிடும் படத்தையே புரிந்து கொள்ள முடியாத நிலையே இருந்தது. ஆனால் தற்போது அதனை உருவமாக வடிவமைத்து இங்கே வைத்துள்ளனர். அதனால் நேரடியாக நாமே அதனை பார்த்து தெரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது இதனால் நாம் தற்போது இப்பாடத்தினை இலகுவாக மனதில் பதித்துக் கொள்கிறோம்.

இதுவரை காலமும் ஒப்புவித்தல் முறையில் அமைந்திருந்த இக் கல்வி தற்போது எங்களை சுயமாக சிந்தித்து அவற்றை ஆராய்ந்து முடிவுகளை நாமே கண்டுபிடிக்கும் அளவிற்கு எம்மை வளர்த்து விட்டது. இங்கே இருக்கும் உபகரணங்கள் ஒவ்வொன்றும்

(13ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் நல்லூர் கிளைநூலகம்

# இவர்கள்... இவர்கள்... இப்படி! இப்படி!

### டாக்டர் காமினி விஜேசேகரா

ஐ. தே. கவின் பொதுச் செயலாளராக அண்மையில் நியமனம் பெற்றவர். அரசியலில் கணவான் தன்மை ஏற்படப் பாடுபடப் போவதாக முழக்கம் செய்துள்ளவர். கொழும்பு மாவட்டம் மகரகம பகுதியில் தனியார் சிகிச்சை நிலையம் ஒன்றை நடத்திவரும் மருத்துவர். பெரிய அளவில் அரசியல் ஈடுபாடு இல்லாத குடும்பப் பின்னணியைக் கொண்டவர். இவரது பாட்டனார் ஒரு காலத்தில் டி. பி. விஜேதுங்காவின் செயலாளராக பணிபுரிந்துள்ளார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் போக்குவரத்து அமைச்சின் செயலாளராகவும், இ. போ. ச. வின் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருந்தவர். 1986இல் ஐ.தே. க.விலிருந்து விலகி ருக்மன் சேனநாயக்காவுடன் சேர்ந்து எக்ஷத் லங்கா ஜாதிக பக்சய (ஈ. எல். ஜே. பி.) என்ற கட்சியை ஸ்தாபித்தவர். 1987இல் அப்போது அமைச்சராக இருந்த காமினி திசாநாயக்காவிற்கு எதிராக நீதிமன்றத்தில் லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த பெரும் முயற்சி மேற்கொண்டவர். 1988இன் ஜனாதிபதித் தேர்தலையடுத்து எக்ஷத் லங்கா ஜாதிக பக்சய கலைக்கப்பட்டு ருக்மன் ஐ. தே. கவில் சேர்ந்தபோது இவரும் ஐ. தே. கவுடன் ஐக்கியம் ஆகினார்.

ஐ. தே. கவிலிருந்து விலகியவர்களை அல்லது விலக்கப்பட்டவர்களை மீள இணைத்து இழந்த பகுதிகளை ஓட்டுவதே முதல் பணி என்றும். ஐ தே க விற்கு புதிய தோற்றம் கொடுகக வேண்டும் என்றும் இவர் பாடுபட்டு வருகிறார். இதற்கு முன்பு இப்பதவியை வகித்த ஹார்சா அபயவர்த்தனாவும், ரஞ்சன் விஜயரட்னாவும் கொல்லப்பட்டதையும் சிறிசேன கூரே நிறைய எதிரிகளை சம்பாதிக்க நேர்ந்ததையும் சுட்டிக் காட்டி ஆபத்து நிறைந்த இடத்தில் இருப்பதாக கூறிக் கொள்கின்றார்.

காமினி திசாநாயக்காவின் அந்தஸ்தை உயர்த்துவதையே புதிய பதவி ஏற்ற பின்னர் அவர் முதலில் செய்ய நேர்ந்தது விநோதமான ஒரு முரண்பாடுதான். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் சிறிலங்கா அரசு நிறைவேற்றிய அரசியலமைப்பிற்கான 13வது திருத்தச் சட்டமூலம் சர்வசன வாக்கெடுப்புக்கு பின்னரே அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது இவரது கருத்து.

### ரணில் விக்கிரமசிங்கா

வயது 45. பிரதம அமைச்சர். ஆளும் கட்சியின் கொள்கை முடிவுகளைப் தீர்மானிப்பதில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முக்கியஸ்தர். டி. பி. விஜேதுங்காவின் தலைமைத்துவத்தின் கீழ் கட்சியிலும், அரசிலும் இரண்டாமிடத்தை வகிப்பவர்.

மிகுந்த விவேகி என்றும், கடுமையான உழைப்பாளி என்றும் பெயர் எடுத்துள்ள அதேவேளை அவரது இரக்கமற்ற போக்கும், வெட்கமும் தூர விலகி நிற்கும் பண்பும், கவர்ந்திழுக்காத பேச்சு வன்மையும் பின்னடைவுகளாக உள்ளது. அத்துடன் தென் மாகாணசபைத் தேர்தலின் போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐ.தே.கவின் தோல்வி இவரது ஆளுமையை மேலும் பாதித்துள்ளது.

இருந்த போதும் விஜேதுங்கா குழுவினருக்கும், பிரேமதாசா அணியினருக்கும் இடையிலான முரண்பாடுகளில் பக்கம் சாராதநிலைப்பாட்டை மேற்கொண்டது அவரது மதிப்பை தக்கவைத்துள்ளது. ஆனாலும் காமினிதிசாநாயக்காவின் மீள்வருகை இவரது செல்வாக்கை பின்தள்ளச் செய்துள்ளது. சிறிசேனகுரேபொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டது ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராகும் இவரதுஎண்ணத்தை குறுகிய காலத்திற்கேனும் ஒத்தி வைக்கச் செய்துவிட்டது.

### காமினி திசாநாயக்கா

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையில் முக்கியத்தராக விளங்கிய காமினி திசாநாயக்கா 51 வயதுடைய மலையக அரசியல்வாதி நுவரெலிய - மஸ்கெலிய தொகுதியிலிருந்து 1977-ம் ஆண்டுத் தேர்தலின் போது முதலாவது உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட இவர், இ. தொ. கா விற்கு நிகரான ஐ. தே. க வின் தொழிற் சங்கமான தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும் விளங்கியவர். ஐ. தே. க வின் தலைவராகவும் முன்பு குறுகிய காலம் செயற்பட்டவர். பிரேமதாசா மீதான அரசியல் குற்ற விசாரணை கோரும் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டது தொடர்பான விடயத்தில் இவரது பங்குபற்றி சார்பாகவும், எதிராகவும் கருத்துக்கள் இப்போது இருக்கின்றன. எனினும் ஐ. தே. க வின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும். ஐ. தே. க அடி மட்டத்திலும் இவருக்கு ஆதரவு உண்டு என்பதை மறுப்பதற்கு இல்லை. அரசியலில் முக்கிய புள்ளியாக பரிணமித்திருப்பது, கவர்ச்சிகரமான பேச்சு வன்மையும் இவருக்கு உரிய விசேட அம்சம். எல்லாத் தரப்பு மக்களோடும் நெருங்கிப் பழகக் கூடிய சுபாவமும், தனக்கு வேண்டியவர்களை வென்றெடுக்கக் கூடிய இயல்பும்விக்கிரமசிங்காவைவிட இவரை பிரபல்யமானவராக்குகிறது.

இருந்த போதும் கூட 1991க்கு பின்னரான இவரது அரசியல் நடத்தைகள் தொடர்பாக கூர்ந்து கவனிப்பவர்கள் அவரை ஓர் அப்பட்டமான சந்தர்ப்ப வாதி என்று கூறுவது தவிர்க்க முடியாதது. பிரேமதாசா அணி எவ்வளவு முயற்சி செய்த போதும் இவரது மீள் வருகையை தடுக்க முடியாமற் போனது இவருக்குவெற்றிதான். எனினும் ஊழல், லஞ்சம் போன்ற குற்றச்சாட்டுகளுடன் நேரடியாக தொடர்புபடுத்தப்பட்டிருப்பதும் இவருக்கு பின்னடைவு மேலும் ஏதாவது ஒரு காரணத்திற்காக டி. பி. விஜேதுங்காவை ஓரங்கட்ட ஐ. தே. க வினரில் ஒரு பகுதியினர் முயற்சி எடுப்பின் இவருக்கான சந்தர்ப்பம் பிரகாசமாகக் கூடும். ஆனால் ஐ. தே. க. தோல்வியுறுமாயின் 1988 முதல் கடைப்பிடித்த போக்கு காரணமாக எதிர் விளைவுகளே இவரைச் சூழும். இன்னும் டி.பி. விஜேதுங்கா தோல்வியுறுவாரேயானால் இயல்பாகவே ரணிலிடம் சிக்கப் போகும் ஐ. தே. க வின் தலைமைப் பதவிக்கு ஈடுகொடுக்க அல்லது அவருக்கு அந்தச் சந்தர்ப்பம் வாய்க்காமற் தடுக்க பெரும் முயற்சி எடுக்க வேண்டியிருப்பது குறித்துதான் இவரது கவலை அதிகமாகி இருக்கிறது. அதாவது சுருங்கச்சொன்னால் ஐ. தே. க வில் இரண்டாமிடத்தைப் பெறுவதே இவரது இப்போதைய குறி.

**இளையவன்**

---

## பாரதிநேசனின் (வீ. சின்னத்தம்பி)

# ஓ கனடா!

## ஒரு நோக்கு

தமிழ் இலக்கியம் இன்று உலக மட்டத்தில் உச்சங்களைத் தொடும் அளவிற்கு வளர்ந்துள்ளது. கவிதை, சிறுகதை என்கின்ற இலக்கிய வடிவங்கள் ஏனைய மொழிகளோடு ஒப்பிடத்தக்கனவாக தமிழ்மொழியில் வளர்ச்சியடைந்துள்ளன.

தமிழ் இலக்கியம் செய்யுள் வடிவத்திலேயே ஆரம்பத்தில் படைக்கப்பட்டுள்ளது. கடந்த நூற்றாண்டின் இறுதியில் அல்லது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் உரைநடையில் இலக்கியம் தமிழில் படைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கு மிக மந்த நிலையில் இருந்தது. இன்று அதன் தரம் பெரும் உயர்ச்சி கண்டுள்ளது.

ஆனாலும்!

நாவலின் நிலை கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக தமிழறிஞர்கள் பலர் சொல்கிறார்கள்.

சிறுகதையிலும் கவிதையிலும் தமிழ் படைப்புக்கள் தேறியுள்ள அளவிற்கு நாவலின் நிலை இல்லை.

தமிழ்நாட்டிலும் சரி, இங்கும் சரி,நாவல் இலக்கியம் பெருவெற்றி பெறவில்லை.

தமிழ்நாட்டில் - புதுமைப்பித்தன், க. நா.சு. சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், தி. ஜானகிராமன் ஆகியோர் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு சிறந்த நாவல்களைத் தந்துள்ளார்கள். இந்த மண்ணிலும் பல எழுத்தாளர்கள் சிறப்பான நாவல்களைத் தந்துள்ளார்கள்.

ஆனாலும் அது சம்பந்தமான திருப்திகரமற்ற விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

தமிழீழத்தில் -

இன்று நாவல் படைப்பு நிலை மிகக் குறைந்துள்ளது. வருடத்தில் ஓரிரு நாவல்களைத்தான் காண முடிகின்றது.

சிறந்த சிறுகதையும், சிறந்த கவிதையும் இந்த மண்ணில் படைக்கப்பட்டுள்ளன. சிறந்த நாவல் படைக்கப்பட வேண்டாமா? நாவல் என்கின்ற நவீன இலக்கிய வடிவத்தின் மூலம் நாம் இந்த மண்ணின் செய்திகளை உலகத்திற்குச் சொல்ல வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

சமீபத்தில் பாரதிநேசன் (வீ. சின்னத்தம்பி) எழுதிய 'ஓ கனடா!' என்ற நாவல் வெளிவந்துள்ளது. பெரிதாக - அட்டகாசமான அட்டையுடன் வெளிவந்த புத்தகம் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அந்த நாவல் சொன்ன விஷயம் மிக முக்கியமானதும் பெறுமதி வாய்ந்ததுமாகும்.

எந்த சப்தமும் இல்லாமல் இந்த நூலாசிரியர் இந்த மண்ணின் அவலத்தை மிக அழகாக குறைந்த பக்கங்கள் கொண்ட நாவலில் சொல்லியுள்ளார் என்று கூறலாம்.

சாதாரண அரசாங்க ஊழியன், குடும்ப வாழ்வில் இறங்கி அரசியல் ரீதியான அழுத்தங்களால் படும் இன்னல்கள், கசப்புகள் மிக ஆக்ரோசமாகச் சொல்லப்பட்டுள்ளன.

தனியொரு 'தம்பிராசா' என்கின்ற தமிழ் ஊழியனின் கண்ணீர் மட்டுமல்ல இது; இங்குள்ள பலரின் வாழ்வுப் போராட்டம் தம்பிராசா என்கிற பாத்திரத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றே சொல்லலாம்.

'சுதந்திரத்திற்கு' முன்னர் 'எழுதுவினைஞராக' நியமனம் பெறும் தம்பிராசா பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

56ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சிங்கள மட்டும் சட்டத்தால் பாதிக்கப்படும் தம்பிராசா வேலையிலிருந்து ஒய்வுபெற்று வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களை எதிர்கொள்ளும் விதம் இயல்பாகக் சித்தரிக்கப்பட்டுள்ளது.

> 'இங்கே கொட்டியா இருக்கா'
> 'இல்லை'
> 'அப்ப எங்க இருக்கு'
> 'எனக்குத் தெரியாது'
> 'பொய் பேசுகிறாய்'
> 'இல்லை. உண்மைதான் சொல்லிறன்'
> 'யார் இங்கே இருக்கிறது?'
> 'என்னுடைய மனைவியும், மகனும், மகளும்'
> 'மகனையும், மகளையும் கூப்பிடு பார்ப்பம்'

கனடா செல்வதற்கான ஆர்வமும் அது பற்றிய கனவும் இன்றைய யதார்த்தத்துடன் விபரிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலினால் தம்பிராசாவின் மருமகனின் கால்கள் இரண்டும் கழற்றப்படுவதும், இந்திய இராணுவத்தின் துப்பாக்கி வேட்டிற்கு தம்பிராசாவின் மகனின் உயிர் பிரிவதும் இன்றைய இந்த மண்ணின்சோகச் செய்தியாக மனசைப் பிறாண்டுகிறது.

தம்பிராசா என்கிற மனிதனின் சரிதையாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பல சிக்கல்கள் உள்வாங்கப்பட்ட முழுமையான நாவலாகவே இதைக் கொள்ள முடிகிறது.

சமீபத்தில் வெளிவந்த நாவல்களில் எமது கனவுகள், காயங்கள், அவலங்கள் மிக யதார்த்தத் தன்மையுடன் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

ஆனால் இந்நூலில் நாவலிற்குரிய கலையம்சங்களை நிறைவான அளவில் காண முடியவில்லை. சில பகுதிகளில் கதை, கட்டுரைத் தன்மையாக வளர்க்கப்பட்டுள்ளது.

உரையாடல்களில் உள்ள ஒரு முக்கிய குறைபாட்டை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. மிக நெருங்கியவர்களுக்கிடையே நிகழும் உரையாடல்-

'நாங்கள் கனடா செல்வதுதான் நல்லது போலிருக்கின்றது. இந்த நரகத்தில் இனிமேலும் வாழ முடியாது'' என்று சிவகாமி கணவனிடம் கூறினாள்.

- இவ்வாறு இருப்பதை தவிர்த்திருக்க வேண்டும். இலக்கண சுத்தம் உரையாடல்களில் பேண வேண்டும் என்பதல்ல.

இதே மாதிரி, தம்பிராசாவின் ரயில் பயண அனுபவமும் கொழும்பு வாழ்வும் மிக நீண்டதாக தொய்வு விழும் வரை நகர்த்தப்பட்டிருக்கின்றமை இந்நூலின் குறைபாடாகக் கொள்ள முடியும்.

தம்பிராசாவின் தம்பியின்- கனடா கடிதத்தை அடுத்து கொழும்பிற்கான பயணம் ஆரம்பமாவதாகக் சொல்லப்பட்டுள்ளது.

'இப்பொழுது கொழும்பு போவது என்றால் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு மினிபஸ்ஸில் அல்லது பஸ்ஸில் பயணம் செய்து பின்னர் வவுனியாவில் இருந்து புகையிரதம் எடுத்து கொழும்பு செல்ல வேண்டும்'

- என நூலாசிரியர் விபரிக்கின்றார். 86ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து புகையிரதம் எடுத்து கொழும்பு பயணமாக கூடிய நிலை இருந்ததென்பதே யதார்த்தமானது.

சிற்சில குறைபாடுகள் மிக சிறிய அளவில் உள்ள போதிலும் இந்தக் காலம் 'ஓ கனடாவில்' அழுத்தமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது,

தமிழிலக்கியத்தில் 'ஓ கனடா' வை நல்ல நாவலாக கொள்ளக் கூடியதாக உள்ளது. ★

**வவுனியா-திலீபன்**

# தமது தலையில் தாமே மண்ணைப் போடும் யேமனியர்

**பாலகுமாரன்**

> "யேமனின் சனாதிபதியாகவுள்ள சலே சதாம்குசையினின்வழியிலேஇப்போது நடைபெறுகிறார். தென் யேமன் மக்களின் நியாயமான கோரிக்கைகளை புறம் தள்ளிவிட்டு இராணுவ பலம் மூலம் அம்மக்களை அவர்இன்று அடக்க முற்படுகிறார். இருபதாம் நூற்றாண்டு முடியப் போகும் இன்றைய நிலையிலும் சருவாதிகாரப் போக்குள்ள - மற்ற நாடுகள் மேலும் ஆதிக்கம் செலுத்தும் நோக்குள்ள ஆட்சியாளர்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள்".

இப்போது இன்னுமொரு சதாம் குசையின் வளைகுடாப் பகுதியில் தோற்றம் பெறுகிறார். 13 வருடங்களாக வட யேமனின் சர்வாதிகாரியாக இருந்து இரண்டு யேமன்களும் இணைந்த பின் யேமனின் சனாதிபதியான அலி அப்துல்லா சாலே அப்படியானதொரு தோற்றத்தையே இப்போது கொடுக்கிறார். தென் யேமனின் தலைநகரமும்செங்கடலின் வாயிலில் உள்ளதும் மேற்காசியாவின் கொங்கொங் என முன்னர் அழைக்கப்பட்டதுமான பிரதான துறைமுகமான ஏடன் நகரை எப்படியேனும் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் அவர் இப்போது விடாப்பிடியாக இருக்கிறார். அவரின் இந்தப் போக்கிற்கு இதுவரையில் ஈராக் மட்டுமே உத்தியோக பூர்வமாக ஆதரவு தெரிவித்துள்ளது. ஏனென்றால் 'பாலைவனப் புயல்' வீசிய வளைகுடாப் போரின் போது சதாமிற்கு ஆதரவாக சாலே செயற்பட்டவராவார் ஆனால் யேமனுக்கும், ஈராக்கிற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் ஈராக்போல வளங்களோ வசதிகளோ அற்றது யேமன் வறுமையின்பிடியிலேயே இன்னமும் உள்ளது. எனவே இப்போது யேமனில் நடக்கும் போர் யேமன் மக்களுக்கு பெருத்த நெருக்கடியைக் கொடுக்கின்றது. அது மட்டுமன்றி யேமனில் அடைக்கலம் புகுந்த பல்லாயிரக்கணக்கான சோமாலிய அகதிகளுக்கும் பெருத்த துன்பத்தை விளைவிப்பதாகிவிட்டது.

இப்போரை நிறுத்த எடுத்த முயற்சிகள் இதுவரைஎதுவுமே பலனளிக்கவில்லை. ஐ.நா. உட்பட எகிப்து, யோர்தான், ஓமான், சவுதி உட்பட பல நாடுகளும் இதுவரை எடுத்த முயற்சிகள் போர் நிறுத்தத்தை கொண்டு வர முடியவில்லை என்பதோடு போரின் தீவிரம் வலுத்துக் கொண்டே போகிறது ஏடனைகைப்பற்றுதல் அல்லது சுற்றிவளைத்தல் என்கிற தனது இலக்கினை அடைவதற்கான தனது முயற்சியை பேச்சுவார்த்தைகள் நடக்கின்ற போதும் சாலே கைவிட்டு விடவில்லை பேச்சுவார்த்தைகள் என்பது காலத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பாக சாலே பயன்படுத்துவதாகக் கூறி தென் யேமனை யேமனிலிருந்து பிரிந்த தனி நாடாக அதன் தலைவரான அல் பெய்த் (ALI SALEM AL BEITH) இப்போது அறிவித்து விட்டார் போர் வலுப்பதால் சவுதி, ஓமான், குவெய்த், பகுரேன் போன்றவை பெருமளவு அகதிகள் தம் பகுதிக்குள் வரப் போவதை எண்ணி இப்போதே அச்சம் தெரிவிக்கத் தொடங்கி விட்டன.

யேமனின் முன்னைய வரலாறே இன்றைய மோதலின் பின்னணியை விளக்கும் ஒரு சலவையான வரலாறு யேமனுடையது. ஒன்றாக இருக்க வேண்டும் என்பதில் யேமனிய மக்கள் விருப்பமுடையவராகஇருந்த போதும் அதற்கான வரலாற்று வாய்ப்பு இல்லை என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனென்றால் வட, தென்யேமன்களுடைய சமூக, அரசியல் தோற்றப்பாடுகளும், அவை படிப்படியாக வளர்ந்த விதமும் முற்றிலும் வேறு வேறானவை என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனென்றால் துருக்கியரின் ஓட்டோமன் சாமிராச்சியத்தின் கீழ் 300 வருடங்களாக இரு யேமன்களும் அடிமைப்பட்டுக் கிடந்தன. என்றாலும் தென் யேமனின்ஏடன் நகரை1839ம் ஆண்டளவில் ஆங்கிலேயர் கைப்பற்றியதோடு வரலாறு வேறாகியது. அதே வேளை வட யேமனோ முதலாம் உலகப்போரின் போது துருக்கியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்த காலம் தொட்டு பழமை வாதப் போக்குள்ள பூர்வீகக் குடிகள் கையிலே வட யேமன் ஆட்சி அதிகாரம் இருந்து வந்துள்ளது.

ஆனால் தென் யேமனோ 1967-ம் அண்டளவில் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றபின் முற்றிலும் வித்தியாசமான போக்கில் செல்லலாயிற்று. பொதுவுடமை வழியில் அரபுப் பகுதியில் முதலாவது மாக்சிய அரசு என்று கூறப்படும் வகையில் தென் யேமன் அடி போட்டது. இதன் காரணமாக தென் யேமன் சமூக பண்பாட்டு முறைமைகள் பெரும் மாற்றம் கண்டன. சோவியத்தின் அரவணைப்பில் தென் யேமன் பெருமளவு மதச்சார்பின்மை நாடாக பெண்கள் இசுலாமியவழக்கங்களிலிருந்து பெரிதும் விடுவிக்கப்பட்டவராக அறிவியல் வளர்ச்சி பெற்றோராக மாறினர். இன்றும் கூட தென் யேமன் பாதுகாப்புக் கடமைகளில் பெண்கள் முக்கிய பங்கேற்கின்றனர். ஆனால் வட யேமன் கதைவோ வேறானது அங்கு இசுலாமிய மதவாதம் பூர்வீகத் தன்மை வாய்ந்த வழக்க முறைகள் கோலோச்சுகின்றன. இந்த வேறுபாடுகள் இன்றளவும் நீக்கப்படாததாலும் எற்கனவே நடந்த பல மோதல்களும் வட,தென் யேமன்களிடையே நிரம்பிய கசப்பு உணர்வை வளர்த்து இருந்தன.

இத்தகைய நிலையிலே சோவியத் சாமிராச்சிய வீழ்ச்சியோடு எல்லாமே மாற்றம் கண்டன. சோவியத்தின் பாதுகாப்பற்ற நிலையில் தென் யேமன் நிலையும் தளர்ச்சி கண்டது. ஏனென்றால் வட யேமனோடு ஒப்பிடும் போது தென் யேமன் எல்லா வகையிலும் சிறியது ஏறத்தாழ 10 மிலியன் மக்கள் வாழும் நிலையில் 2 மிலியனுக்கும் கூடுதலாகவே தென் யேமனியர் உள்ளனர். இத்தகைய நிலையிலே இணைப்பு முயற்சி எடுக்கப்பட்டு அரபுலக அதரவோடு 1990ஆம் ஆண்டு இரு யேமன்களும் ஒன்றாக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட யேமனியக் குடியரசாகியது. பெரும் எதிர்பார்ப்புக்களை தொடக்கத்தில் யேமனியக் குடியரசு ஏற்படுத்தியது. ஆனால் இன்று எல்லாமே பொய்த்து விட்டன. முழுஉலகமுமே வியக்கும் வண்ணம் அரபுலகிலே முதன் முறையாக மிகச் சுதந்திரமான சனநாயகமுறையில் நடைபெற்ற தேர்தலாக 1993 ஏப்ரல் மாதம் யேமனியக் குடியரசில் முதலாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. ஆனால் தேர்தலின் பின்னே மோதல்கள் ஆரம்பித்தன. பிளவுகள் மேலும் விரிவடைந்தன.

ஏனென்றால் 301 தொகுதி பேரவைக்கு நடைபெற்றதேர்தலில்சாலேயின் கட்சியான G.P.C எனப்படும் பொதுமக்கள்கொங்கிரஸ் கட்சி 122ஆசனங்களையும், அல்பெய்த்தின் YSP எனப்படும் யேமனிய சோசலிசக்கட்சி 56 இடங்களையுமே பெற்றது. அதேசமயம் இசுலாமிய அடிப்படைவாதக்கட்சியான சவுதி அரேபியாவின் ஆதரவு பெற்ற இஸ்லா (Islah Party) கட்சி 62 இடங்களைப் பெற்றது. தேர்தல் முடிவுகள் தென்யேமனிய தலைவரான அல்பெய்த்திற்கு துயரத்தையே தந்தது. ஏனென்றால் அவரது முற்போக்கு எண்ணங்களை வட யேமனியர் அதிகம் விரும்பாததோடு அவர் 3-ம் இடத்திற்கும் தள்ளப்பட்டார். எனவே தேர்தல் முடிவுகளும் வட, தென்யேமனிய வேறுபாடுகளையே சுட்டிநின்றன. அத்தோடு இஸ்லா கட்சியோ தென் யேமனின் மதச்சார்பின்மை போக்கினை மாற்றி இசுலாமிய அடிப்படைவாத அடிப்படையில் சமூக வாழ்க்கை அமைய வேண்டும்என்ற விருப்புக்கொண்டது.

எனவே பிரதான சிக்கல்கள், சமூகப் பொருண்மியத் துறைகளில் மேற்கொள்ள வேண்டிய சீர் திருத்தங்கள், மாற்றங்கள் தொடர்பாக மட்டுமன்றி இராணுவங்களை எவ்வாறு ஒன்றாக்குவது என்பதிலும்தோன்றின. இதுவரை இராணுவத்தை ஒரே தலைமையின் கீழ் கொண்டு வர முடியவில்லை. அல்பெய்த்தோ, தனது ஆதரவாளர்கள் 120 பேருக்கும் மேல் இசுலாமிய அடிப்படைவாதிகள் கொன்று விட்டதாகக் கூறி இது தொடர்பாக விசாரணை வேண்டுமெனக் கோரினார். சூடானின் ஆதரவோடு இயங்கும் 'ஜிகாத்' எனும் ஒரு புதிய குழுவே இதனைச் செய்ததாக அவர் குற்றம் சாட்டினார். இதற்கிடையில் சாலே தனது அட்சியை உறுதிப்படுத்த இஸ்லா கட்சியோடு உடன்பாடு காணவே நிலைமைகள் மோசமாகின. சாலே அமைச்சரவையில் 31 பேரில் 21 அமைச்சர்களை தனது கட்சியிலிருந்தும், இசுலாமிய கட்சியிலிருந்தும் நியமித்தார். கடந்த யூன் மாதம் இசுலாமியஅடிப்படைவாதக் கட்சி சோசலிச சார்பான சட்ட முறைமைகளை நீக்கி இசுலாமிய அடிப்படைவாத சட்டவாக்கங்கள் கொண்டுவர வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கவே நிலைமைகள் இன்னமும் மோசமாகின. தான் புறக்கணிக்கப்படுவதாக அல் பெய்த் உணரத தலைப்பட்டார். இதனால் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் அவர் புதிய தேசிய மன்றைப் புறக்கணிக்கப் போவதாகக் கூறி தனது ஆதரவாளர்களோடு பழையபடி தென் யேமனின் ஏடன் நகருக்கு சென்று விட்டார். இதனால் முன்போலவே வட யேமன் சானாவை (Sana) மையமாக வைத்தும் தென் யேமன் ஏடனை மையமாக வைத்தும் இயங்கத் தொடங்கின. இரு பகுதிகளுமே தமது தரப்பினைப் பலப்படுத்தத்தொடங்கின குறிப்பாக சாலே முதலிருந்தே தனது இராணுவத் தரப்பை ஆயத்த நிலைக்கு கொண்டு வந்துவிட்டார் என்றே கூறப்படுகின்றது.

இப்போது இச் சூழலால் யேமன் நிருவகிக்கப்பட முடியாத குழப்ப நிலை அடைந்துள்ளது. நாட்டில் அமைதியின்மை, குழப்பங்கள் மலிந்தன. ஆட்கடத்தல்கள் தொடர்ந்தன. எண்ணெய் ஏற்றுமதித் துறையும் பாதிப்பு அடைந்தது. தனது எண்ணெய் வளங்களை வட யேமன் சுரண்டுவதாக தென் யேமன் முறைப்பட்டது. இத்தகைய நிலையில் மக்கள் வாழ்க்கைத் தரம் பெரிதும் பாதிப்புற்றது. 100 விழுக்காட்டிற்கு மேலாக பணவீக்கம், உணவுப் பொருட்கள், தட்டுப்பாடு காரணமாக சென்ற வருடம் டிசம்பர் மாதம் பெரும் கலவரங்கள் யேமனில் ஏற்பட்டன 100க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இத்தகைய சிக்கலுக்கு வளைகுடாப் போரில் சாலே சதாமுக்கு ஆதரவாக செயற்பட்டதால் அது வரை காலமும் வளைகுடா நாடுகளிலிருந்து கிடைத்து வந்த உதவிகள் நிறுத்தப்பட்டதோடு சவுதியில் உழைத்து பணம் அனுப்பிய 8 இலட்சத்திற்கு மேற்பட்ட யேமனியரை சவுதி திருப்பி அனுப்பியதும் பிரதான காரணமாகியது. இதனால் வருடாந்தம் 2 பிலியன் அமெரிக்க டொலர் இழப்பும் ஏற்பட்டது. இவ்வாறு பல்வேறு சிக்கல்கள் தொடரவே நிலைமைகள் தீவிரமடைந்தன. ஜோர்தான், சிரியா, எகிப்து போன்றவை அமெரிக்க ஆதரவோடு இவ் வருடம் மாசி மாதமளவில் அம்மானில் ஏற்படுத்திய இரு தரப்பு இணக்கமும் பலன் தரவில்லை.

இங்குள்ள இன்னொரு சிக்கல், இப்பிராந்தியத்தில் சவுதி அரேபியா மேலாதிக்கம் பெறுவதை விரும்பாதயோர்தான் ஓமான் போன்றவை யேமனி ஒன்றாக ஒருமைப்பாடாக இருந்தால் தான் நல்லது என விரும்புகிறார்கள். அதே சமயம் சவுதியைப் பொறுத்தவரை தனது அருகில் யேமன் பலமிக்க நாடாக உருவெடுப்பதை விரும்பவில்லை எனப்படுகின்றது. அத்தோடு இரு நாடுகட்கும் எண்ணெய் வளமுள்ள எல்லைப் பகுதி தொடர்பாக பிணக்குகளும் உண்டு. வேறு எவரையும் விட யேமனின் பாதுகாப்பு என்பது தன்னைப் பொறுத்தவரை மிக முக்கியமானது என்று சவுதி கூறிக் கொள்கின்றது. தற்போதைய யேமனின் குழப்ப நிலை தனக்கு பாதகமில்லாமல் தொடர்வதையே சவுதி விரும்பக் கூடும் எனக் கருதப்படுகின்றது. இப்படிப்பட்டநிலையிலே அரபு லீக், ஐ.நா. என இரு அமைப்புக்களும் எடுக்கும்முயற்சிகள் பயனளிக்குமா என்பது கேள்விக் குறியாகவேயுள்ளது.

வடயேமன்தலைவர் சாலே கடந்த மே மாதம் அவசர கால நிலைமையை நாட்டில் பிறப்பித்து இராணுவத்தை தனது ஆணையின் கீழ் கொண்டு வந்து உப சனாதிபதி அல் பெய்த் ஏனைய அவரது கட்சி உறுப்பினராக உள்ள பிரதம மந்திரி உட்பட பல முக்கிய அமைச்சர்கள் யாவரையும் பதவி நீக்கம் செய்து தென் யேமன் மீது போரைத் தொடங்கி விட்டார் இப்போது ஏடன் மீது மிகக் கடுமையான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாக கடைசிச் செய்திகள் தெரிவிக்கின்றன. போர் தொடர்ந்தால் தென் யேமனோ தன்னை சுதந்திர நாடாக அங்கீகரிக்குமாறு ஏனைய அரபு நாடுகளை வற்புறுத்தும் என நம்பப்படுகின்றது இதைப் பொறுத்தே,

யேமனின்எதிர்காலம் பற்றி எவரும் முடிவுக்கு வரமுடியும் பொதுவில் நியாயம் தென் யேமனின் பக்கம் உள்ளதாககவே கருதப்படுகின்றது. ''வட யேமன் படைகள் ஏடனுக்குள் நுழைந்தால், அது ஆக்கிரமிப்பாகவே கருதப்படும் என எகிப்து அறிவித்துள்ளது. 37,000க்கும் மேற்பட்ட படைகளை கொண்டுள்ள வடயேமன் ஏடனை கைப்பற்றி தக்க வைப்பது கடினமானது என்றே கருதப்படுகின்றது. அல் பெய்த் சரணடைய வேண்டும் என்று சாலேயும், இறுதிவரை போராடுவோம் என்று அல்பெய்த்தும் இப்போது கூறிக்கொள்கின்றார்கள்.

(13ஆம் பக்கம் பார்க்க)

## மகனின் முகம்

ஒரு-  
கும்மிருட்டில்-  
உனது முகம்-  
தெளிவாகவே-  
எனக்குத்  
தெரிந்தது ..

மழைக்குள்-  
விழுந்த மின்னலில்-  
நினது-  
வெள்ளைப் பற்கள்-  
வெளிச்சமாகவே-  
எனக்கு-  
தெரிந்தன-

தோள்களின்-  
இருப்புகளும்-  
சீருடையும்-  
உனது-  
கால்களின்நடையும்-  
எனது-  
ஒரே மகனை-  
நினைவூட்டுகின்றன

கும்மிருட்டில்-  
உனது முகம்-  
தெளிவாகவே-  
எனக்கு-  
தெரிந்தது-

-நல்லைஅமிழ்தன்

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# படை நடவடிக்கைக்கு காரணமானவரையும் பலியெடுத்த ஒபரேஷன் 'புளூஸ்ரார்'

துஷ்யந்தன்

1984 மே மாதம் 30 ஆம் திகதி உலகில் எடுக்கப்பட்ட மிகப்பெரும் கிளர்ச்சியாளர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒன்று எனக் கூறப்படும் 'ஒபரேஷன் புளூஸ்ரார்' (Bluestar) இராணுவவ நடவடிக்கையை ஆரம்பிக்க இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அனுமதி அளிக்கின்றார். இதைத் தொடர்ந்து மீரட் நகரில் நிலைகொண்டிருந்த ஒன்பது இந்திய இராணுவக் காலாட் படைகள் அன்றிரவு பஞ்சாப் அம்ரிற்சர் நகர் நோக்கி நகர ஆரம்பித்தன. ஏற்கனவே பஞ்சாப் அம்ரிற்சர் சீக்கிய பொற்கோயில் போன்றதோர் மாதிரியமைப்பை உருவாக்கிஅதில் ஊடுருவுவதற்கான பயிற்சிகளை விசேடமாக பெற்றுக் கொண்ட இந்திய இராணுவத்தின் சிறிய கொமாண்டோ குழுவும் இந்த இராணுவ அணியில் இடம் பெற்றிருந்தது.

ஜூன் 1 :

அம்ரிற்சர் நகரில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்நகரை சுற்றியும் பொற்கோயிலையும் முற்றுகையிட்டும் சுமார் 70,000 இந்தியத் துருப்புகள் நிலையெடுத்திருந்தனர்.

ஜூன் 2 :

பஞ்சாப் மாநிலத்தின் சகல போக்குவரத்துப் பாதைகளும் படைகளால் துண்டிக்கப்பட்டன. விமான சேவைகளும் நிறுத்தப்பட்டன. இராணுவத் தளபதி ஜெனரல் ஏ. எஸ். வைத்யா சிறீநகரிலிருந்து பஞ்சாப் விரைந்தார். சீக்கியரின் பொற்கோயில் இந்திய துருப்புகளின் பிகார் ரெஜிமன்டின்12 ஆம் பிரிவினால் முற்றாக சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. பொற்கோயிலை சுற்றியுள்ள உயரமான கட்டிடங்களில் ஆயுதம் தரித்த ரிசர்வ் பொலிசாரும் எல்லைக் காவற்படையினரும் நிறுத்தப்பட்டனர். எனினும் இந்நிலைகள் சீக்கிய கிளர்ச்சியாளர்களின் கைக்குண்டு வீச்சிற்கு இலகுவாக எட்டக்கூடிய இலக்குகள் என்பதை உணர்ந்து கொண்ட படை அதிகாரிகள் தமது திட்டத்தை மாற்றியமைத்தனர். பொற்கோயிலுக்கு அருகேயுள்ள கைவிடப்பட்ட குடியிருப்புகளில் மண்மூடைகள் அடுக்கப்பட்டு அவற்றினுள் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டனர்.

ஜூன் 3;

பொற்கோயிலினுள்இருக்கும் சீக்கிய கிளர்ச்சியாளர்கள் மீது உளவியல் ரீதியிலான போரை நடத்த திட்டமிட்ட அதிகாரிகள் பொற்கோயில் முழுமையாக படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்ட முயற்சித்தனர் ஒலிபெருக்கிகள் மூலம் சரணடையுமாறு மீண்டும் மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் இவற்றிற்கு பதிலாக பொற்கோயிலினுள் இருந்து துப்பாக்கி வேட்டுகளே கிடைத்தன. அதேசமயம் அன்று நள்ளிரவு பொற்கோயிலினுள் இருந்து இந்திய இராணுவத்தினரின் நிலைகள் மீது எம். எம். ஜி தாக்குதல் திடீரென நடத்தப்பட்டது.

ஜூன் 4:

பொற்கோயிலின் உயர் கோபுரங்களில் கிளர்ச்சியாளர்கள் உட்புறமாக ஏறி திடீரென இந்தியப்படைகள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தவேண்டிய அவசியம் உணரப்பட்டது. இராணுவ ஜீப் வண்டிகளில் பொருத்தப்பட்ட பின்னுதைப்பற்ற பீரங்கிகளை, கோயிலின் உயரம் மிகுந்த கோபுரங்களை தகர்க்க படையினர் எடுத்து வந்த போதிலும் தாக்குதல் வேகம் அதிகமான கனரக பீரங்கிகளே தேவை என்பதை கிளர்ச்சியாளர்கள் இடையிடையே பொற்கோயிலினுள் இருந்தவாறு படையினர் நிலைகள் மீது நடத்தும் தாக்குதல்கள் அதிகாரிகளுக்கு உணர்த்தின. குறுந்தூரத்திற்கு ஆனால் இலக்கு பிசகு இன்றி தாக்கக் கூடிய பீரங்கிகள் பயன்படுத்த முடிவாகியது, எனினும் காற்றின் வேகம் அதிகமாகவுள்ள அப்பகுதியில் குறுகிய கோபுரங்களை எறிகணையினால் தாக்குவது கடினம் எனவும் இலக்குத்தவறின் எறிகணை சுற்றி நிறுத்தப்பட்டுள்ள இந்தியப் படைகளையே தாக்கக் கூடிய அபாயம் உள்ளது எனவும் சில அதிகாரிகள் சுட்டிக் காட்டினர். எனினும் இப் பீரங்கிகளைபயன்படுத்துவதைத் தவிர வேறுவழியில்லை என்றரீதியில் இவற்றின் மூலமே கோயிலை சுற்றியிருந்த உயரமான குறுகிய அந்தக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டன. இதையடுத்து உயரமான பகுதிகளிலிருந்து கிளர்ச்சியாளர்கள் நடத்திய சினைப்பர் தாக்குதல்கள் ஓய்ந்தன.

எனினும் பொற்கோயிலினுள் இருந்து கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஆர். பி.ஜி தாக்குதல் பொற்கோயிலை சுற்றி ரோந்துவரும் படையினரின் சில வாகனங்களை தகர்த்தெறிந்தன இதைத் தொடர்ந்து முற்றுகைக்காக கனரக கவசவாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

ஜூன் 5

ஜாலியன் வாலாபாக் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த இந்திய இராணுவத்தின் பீரங்கிகள் பொற்கோயிலினுள் எறிகணைகளை வீசின. இடையிடையே தாக்குதல் நிறுத்தப்பட்டு சரணடையுமாறு ஒலிபெருக்கியில் படையினர் அறிவிப்பு விடுத்தனர்.

இதே சமயம் இரு சீற்றாரக இராணுவ உலங்குவானூர்திகள் பொற்கோயில் வளாகம் மீது சுற்றிப்பறந்தபடி உள் நிலைமைகளை அவதானித்தபடியிருந்தன. இவற்றிலிருந்து எறிகணைகள் தாக்க வேண்டிய இலக்கு குறித்து அறிவுறுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இவற்றின் பின்பும் சீக்கிய கிளர்ச்சியாளர்கள் சரணடைவதற்கான எந்த சமிக்ஞைகளையும் காட்டவில்லை. பொற்கோயில் முற்றுகையிடப்பட்டு சுமார் நூறுமணி நேரங்கள் கடந்து விட்டன.

இவ்வேளையில் தான் பஞ்சாப் மாநிலத்தில் ரோந்து சுற்றிக் கொண்டிருந்த உலங்குவானூர்தி ஒன்றிலிருந்து வந்த தகவல் அதிகாரிகளுக்கு அதிர்ச்சியளித்தது. தமது வணக்கஸ்தலத்தை இந்தியப் படைகள் முற்றுகையிட்டு அதன்மீதுதாக்குதல்நடாத்துவதால் வெகுண்டு எழுந்த சீக்கியர்கள் ஊரடங்கு சட்டத்தையும் மீறி திரண்டு அமிர்தசரஸ் நகர்நோக்கி வந்து கொண்டிருப்பதாக கிடைத்த தகவல் கூறிற்று இதனால் உஷார் அடைந்த அதிகாரிகள் மக்கள் பலராக கூடினால் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடாத்தப்படும் என எச்சரிக்கைகளை விடுத்தனர் ஆனால் இந்த எச்சரிக்கைகள் பலன் தரவில்லை. அமிர்தசரசிலிருந்து 25 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கிராமம் ஒன்றில் சுமார் 30,000 மக்கள் தமது பாரம்பரிய ஆயுதமான வாள்களுடன் ஒன்று திரண்டு பாபா பிட்கிசான்ட் என்பவரது தலைமையின் கீழ் பொற்கோயில் நோக்கி கிளம்பினர். இதேபோன்று அஜனாலா, ராஜாரன்சி கிராமங்களிலிருந்தும் கிழக்கு புறமாக தருகேசலி, பத்திபூர், பட்டியாலா ஆகிய பகுதிகளிலிருந்தும் சீக்கிய மக்கள் கூட்டம் பொற்கோயில் நோக்கி புறப்பட்டது. கூட்டத்தினரை பொலிசாரால் கட்டுப்படுத்த முடியவில்லை. துப்பாக்கிச்சூடு நடத்தப்படின் அது இனக்கலவரமாக உருமாறி தமது பொற்கோயில் முற்றுகைத் திட்டம் பிசுபிசுத்து விடும் என்பதை அதிகாரிகள் உணர்ந்தனர். பெரும் சிக்கல் நிலைக்குள்ளான அதிகாரிகள் இறுதியில் முற்றுகையை கைவிட்டு பொற்கோயிலினுள் இராணுவத்தை உடனேயே அனுப்புவது என முடிவு செய்தனர். திட்டம் உயர்மட்ட அங்கீகாரத்தையும் பெற்றது.

ஜூன் 5 இரவு:

பொற்கோயிலினுள்நுழைய ஏற்கனவே பொற்கோயில் போன்ற ஓர் மாதிரி அமைப்பில் பயிற்சி பெற்ற லெப். கேணல் முகமட் இஸ்ரார் தலைமையிலான விசேட படையணிக்கும், குண்டு துளைக்காத கவசம் அணிந்த கறுப்பு சீருடை தரித்த இராணுவ கொமாண்டோ அணிக்கும் தயார் நிலையில் இருக்கும்படி உத்தரவு கிடைத்தது. இந்திய இராணுவத்தின் கொமாண்டோ அணி ஒன்று களத்தில்இறங்குவது பல வருடங்களுக்குப்பின் இது வே முதற்தடவையாக இருந்தது.

பொற்கோயிலினுள் முன்னதாக கொமாண்டோப் படைகள் நுழைந்து கிளர்ச்சியாளர்களின் துப்பாக்கி நிலைகள் உள்ள இடங்களை அழிப்பது, இயலுமான வரையில் சீக்கிய கிளர்ச்சித் தலைவர்களை கைப்பற்றுவது என்பது திட்டமாக இருந்தது. இவர்கள் உள்நுழையும் போது இவர்களுக்கு பாதுகாப்பாக பின்னின்று ஏனைய படையினர் கிளர்ச்சியாளர்கள் நிலைமீது துப்பாக்கிச் சூடுகளை பரவலாக நடத்தி அவர்களது கவனத்தை திசை திருப்புவதும் எனவும்திட்டமிடப்பட்டிருந்தது.

## புளூஸ்ரார் ஆரம்பம்

புளூஸ்ரார் நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. துப்பாக்கி வேட்டுகளினால் அமிர்தசரஸ் நகர் அதிர்ந்தது. இந்திய கொமாண்டோக்கள் ஓர் ஒடுங்கிய பாதையூடாக முன்னேறினர். இவ்வேளையில் இவர்கள் சீக்கிய கிளர்ச்சியாளர்களின் கடும்தாக்குதலுக்கு இலக்காகினர். 40 பேரைக் கொண்ட அந்த கொமாண்டோ அணியில் மூவர் கொல்லப்பட்டனர். குண்டு துளைக்கா கவசம் அணிந்திருந்தும் 19 படையினர் காயமடைந்தனர்.

எஞ்சிய படையினர் தொடர்ந்து முன்னேறி சரணடைய தயாராக இருந்த சீக்கிய தலைவர்களான லோங்கோவால், குருசந்திரசிங் ரோறா போன்ற மிதவாதிகளை பிடித்துக் கொண்டு வெளியேறினர். கிளார்ச்சியாளர்களின் எல்.எம்.ஜி துப்பாக்கி நிலைகளை அழிக்க வேண்டியிருந்ததால் மீண்டும் இம்முறை பெரியளவிலான கொமாண்டோப் படைகள் நுழைந்தன. உள்ளே நுழைந்த இவர்கள் பல பிரிவுகளாக பிரிந்து துப்பாக்கி நிலைகளை அழிக்கும் முயற்சியில் கடுமையாக போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது

இச்சமயத்தில் உதவிக்காக இந்திய இராணுவத்தின் பீகார் ரெஜிமண்டின்காலாட் படைகளை பொற்கோயிலினுள் படையினர் நுழையுமாறு உத்தரவிடப்பட்டது. படையினர் நுழைந்ததைத் தொடர்ந்து பொற்கோயில் வளாகத்தினுள் பெரும் மோதல் வெடித்தது. உயரமான இடங்களில் இருந்தவாறு கிளர்ச்சியாளர்கள் நடத்திய துப்பாக்கிச் சூடுகளிலும் கைக்குண்டு வீச்சிலும் இந்தியப் படையினர் பலர் தலை சிதறினர். புனித பொற்கோயில் எங்கும் இரத்தமயமாக காணப்பட்டது. கடும் மோதலின் மத்தியில் முக்கிய இலக்காக கருதப்பட்ட பொற்கோயிலின் ''அகால் தகத்'' கட்டிடத்தொகுதி நோக்கி இந்தியப்படைகள் நகர ஆரம்பித்தபோதே அவர்கள் எதிர்பாராத அளவு எதிர்ப்பு சீக்கிய சிளர்ச்சியாளரிடமிருந்து வந்தது. படையினரின் முன்னேற்றம் தடைப்பட்டது. அதிகாரிகள் மீண்டும் மீண்டும் கட்டளையிட்டும் கிளர்ச்சியாளர்களின் இயந்திர துப்பாக்கி சூடுகளை ஊடறுக்க முடியாத நிலையில் திணறிய படையினர் பின்வாங்கினர் ''அங்கு ஒவ்வொரு அங்குலமும் துப்பாக்கிக் குண்டினால் நிரம்பியிருந்தன'' என நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவக் கேணல் ஒருவர் பின்னர் செய்தியாளர்களிடையில் பேசுகையில் கூறினார். மேலதிகபடைகள்அனுப்பப்பட்டும் முயற்சி கைகூடவில்லை. அதிகாரிகள் விழித்தனர். இறுதியில் டாங்கிகளை நகருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பேரோசையுடன் டாங்கிகள் நகர்ந்தன.

ஜூன் 6

அகால் தகத் நோக்கிச் சென்ற டாங்கிகள் அக்கட்டிடத்தின் தூண்களைஇலக்கு வைத்துதாக்கிஅவற்றைவீழ்த்தினடாங்கிகள்மாறி மாறிஅக்கட்டிடத் தொகுதி மீது குண்டுகளைஏவியபடி இருந்தனர். இதனால் எழுந்த பெரும் ஒலி அயலில் உள்ள நகரங்களில் வாழ்ந்த மக்களை கிலிகொள்ள வைத்தது. டாங்கிகளின் அகோரத்தாக்குதலினால் அக்கட்டிடத் தொகுதியின் ஒரு பகுதி சேதமடைந்தது. அதனுள் இருந்து வந்த எதிர்ப்பும் குறைவடைந்தது. இதைத் தொடர்ந்து அதை நோக்கி முன்னேறிய படையினர் அக்கட்டிடத்தின் யன்னல்களூடாக வீசிய கைக்குண்டுகள் இறுதிவரை தீவிரமாக எதிர்த்தாக்குதல் நடத்திய சீக்கிய கிளர்ச்சியாளர்களின் தலைவர்களில் ஒருவரான பின்ந்திரன் வாலேயின் முகத்தைக் காயப்படுத்தியது. தொடர்ந்து இவர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகளினால் அவர் பொற்கோயினுள் இறந்து வீழ்ந்தார்.

பின்ந்திரன் வாலேயின் வீழ்ச்சியின் பின்னரும் பொற்கோயில் முழுமையாக சரணடையவில்லை. இருப்பிலிருந்த சொற்பளவு நிலக்கடலையை உணவாக உட்கொண்டு உயிர் வாழ்ந்தபடி பொற்கோயிலினுள் சந்துபொந்துகளினுள் இருந்து கிளர்ச்சியாளர்கள் இராணுவத்தினரை தமது கைக்குண்டுகளுக்கும் சினைப்பர் தாக்குதலுக்கும் இரையாக்கினர், தொஹ்ரா ரெஜிமன்டின் 10ஆம் பட்டாலியன் இவ்வாறு இராணுவ நடவடிக்கையின் பின்னர் நடைபெற்ற மோதல்களில் அதிகஇழப்பை சந்தித்தனர்

ஒரு தடவை பொற்கோயிலின் நிலத்தடி சுரங்கத்தில் பதுங்கியிருந்த கிளர்ச்சியாளர்களால் ஒரு இந்திய இராணுவ டாக்டர் கப்டன் அவரின் உதவியாளர், இருசிப்பாய்கள் பிடிக்கப்பட்டனர். இத்தீவிரவாதிகளை சரணடையச் செய்யுமாறு கோரி தம் முயற்சியில் தோற்ற படையினர் இப்பகுதியையே கடும் எறிகணை வீச்சிற்கு உட்படுத்தி தரைமட்டமாக்கி அழித்தனர். ஒரு சமயம் அப்போதைய இந்திய ஜனாதிபதி ஜெயில் சிங் பொற்கோயில் முழுமையாக விடுவிக்கப்பட்ட தாககாட்டும் வகையில் அங்கு நேரில் விஜயம் செய்தார். அங்கு அவருக்கு அருகில் சில யார் தூரத்தில் நின்றகொமாண்டோப் படை அதிகாரி ஒருவர் மீது எங்கிருந்தோ வந்த துப்பாக்கிக் குண்டு ஒன்று அவரைத் தாக்கியது அதிர்ஷ்டவசமாக அவர் குண்டு துளைக்கா கவசம் அணிந்திருந்ததால் உயிர் பிழைத்தாலும் குண்டின் தாக்கவேகத்தினால் அவர் தூக்கி வீசப்பட்டதை இந்திய ஜனாதிபதி தனது கண்களாலேயே கண்டார்.

பொற்கோயில் மீட்பதற்கான புளூஸ்ரார் நடவடிக்கையில் 200க்கு மேற்பட்ட இந்தியத் துருப்பினர் பலியானதாகவும் இதேயளவு சீக்கியர்களும் கொல்லப்பட்டதாகவும் இந்தியத் தரப்புச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் இதைவிட பாரிய இழப்பு பழிவாங்கும் குணம் அதிகமாக கொண்டவர்கள் எனக் கூறப்படும் சீக்கியர்களால் இந்தியாவிற்கு கிடைத்தது புளூஸ்ரார் நடவடிக்கையை முன்ன நடத்திய இராணுவத்தளபதி ஜெனரல் ஏ. எஸ். வைத்யாவும், நடவடிக்கைக்கு உத்தரவிட்ட பிரதமர் இந்திரா காந்தியும் அடுத்தடுத்து சீக்கியரின் பழிவாங்கலுக்கு இரையாகினர்.

✶

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளநூலகம்

உ
சிவமயம்
இரேணுக குருப்பியோம்நம:

## சிவஐக்கிய சமாதியடைந்த அகில இலங்கை வீரசைவ குருமகாசன்னிதானம்
## சிவாகமபாஸ்கர பூஷணம் வண்ணை வீரகுரு வீரசைவ
# சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைச் சிவாச்சாரியார்
## (கைலாயதேசிகர்) அவர்களின்
# நினைவு மலர்

### வெண்பா

ஆர்வீர சைவ அருளொளியை அன்பருக்கு
ஏர்சேர ஏற்றிவரு மெங்குருவை-சேர், ஐயம்
பிள்ளைக் குருக்களவர் பேசினால்
தீர்ந்துனது
உள்ளந்தெளிவாகுமே.
பொல்லா வினைபோக்கப் புண்ணியத்தின்
நல்லுருவாய்
வல்ல குருவாக வந்தவன்றான் - நல்ல
அருள்சுரக்க ரேணுகமா மாச்சிரமம் வைகும்
இருளிலாஐ யம்பிள்ளையே.

சிவ ஐக்கிய சமாதியடைந்த ஈழவள நாட்டின் வீரசைவ குருமகா சன்னிதானமும், கீரிமலை இரேணுகாச்சிரம ஸ்தாபகரும் குருபீடாதிபதியுமாகிய வீரசைவ சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைச் சிவாச்சாரியாரவர்களை நினைவு கூர்வதும் அன்னாரது பெருமையினை எடுத்துக் கூறுவதும் சிவ புண்ணியச் செயல்களாகும்.

ஈழவள நாட்டின் வண்ணை நகர் ஐயனார் கோவிலடியில் வீரசைவ மரபில் வந்த பல குருமார்கள் வசித்து வந்தனர். இவர்களுட் பெருமை சான்ற காயாரோகணக்குருக்களின் வழித்தோன்றியவர் சிவசிதம்பரப்பிள்ளைக் குருக்களாவர். இவருக்குச் சற்புத்திரராக நமது குருநாதர் ஐயம்பிள்ளைச் சிவாச்சாரியார் அவதரித்தார்.

இவரது இளமைக்காலம் மிகத்தூய்மையானது சைவ ஒழுக்கங்களில் மிக்க பற்றுதல் கொண்ட இவர் அவற்றைக் கைக்கொண்டொழுகுவதில் பெரும் ஆர்வம் காட்டினார். பிற்காலத்தில் மக்கள் போற்றும் வீரசைவக் குருவாகத் திகழ்வார் என்பதற்கரிய நல்ல அறிகுறிகள் இவரது இளமைக்காலத்திலே தென்பட்டன.

சன்னிதானமவர்கள் தனது இரண்டாம் வயதிலேயே தந்தையை இழக்க நேரிட்டுவிட்டது. பின்னர் தனது மாமன் சட்டம்பியாரின் அரவணைப்பில் அவரால் நடாத்தப்பெற்ற பாடசாலையிலும்,பின்னர் ஆறுமுகநாவலர் வித்தியாசாலையிலும் கல்வியை கற்றுவந்தார். சன்னிதானமவர்களுக்கு வயது வளர்ந்து கொண்டிருந்ததைப்போல பல நூல்களைக்கற்க வேண்டும் பல்வேறு மொழிகளிலுள்ள நூல்களைக் கற்று வீரசைவ நெறியினை விரிவாக அறிய வேண்டும் என்ற ஆர்வமும் வளர்ந்து வரலாயிற்று.

ஆறுமுக நாவலர் வித்தியாசாலையில் உயர் கல்வியைப்பெற்ற சன்னிதானம் அவர்கள் சுண்ணாகம் குமாரசாமிப்புலவர், கைலாயபிள்ளை ஆகியோரிடம் பன்னூல்களைக்கற்று தமிழில் புலமை பெற்றார். அத்துடன் கிரந்தம், நாகரம், கன்னடம் முதலிய மொழிகளைப் பயின்று புலமை பெற்றார். பிறமொழிப் பயிற்சியால் வீரசைவ நெறியில் சன்னிதானமவர்களுக்கு நாட்டம் அதிகமாயிற்று. வீரசைவ நெறியைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவாவினால் அந்நெறி பற்றிய நூல்களைத் தேடியலைந்தார். இத்துறையில் சன்னிதானமவர்களுக்கு மனமுவந்து உதவியவர்கள் மட்டுவில் பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களும் கலைப்புலவர் நவரத்தினம் அவர்களுமாவர். சன்னிதானமவர்கள் வீரசைவ குருபீடங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வீரசைவ நெறியை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார். நெறிவழுவாது நிற்கும் வீரசைவ குருவாக மாறினார்.

இந்தியாவில் தமிழ்நாடு கும்பகோணம் பெரியமடம் ஸ்ரீ வீரபத்திர ஸ்தாபனாச்சாரிய வீரசிம்மாசன பீடாதிபதி ஜகத்குரு சாரங்கதேசி கேந்திரமஹாசுவாமிகள் அவர்களிடமும் வீரசைவ கிரியா நெறிகளையும் ஒழுக்கங்களையும், அனுட்டானங்கள், தத்துவங்கள் முதலியவற்றையும் கற்றும், படிமுறைப்படி நடந்தும் குருமகாசன்னிதானத்தினால் குருப்பட்டம் சூட்டப்பெற்றார். சன்னிதானம் அவர்கள் ஈழந்திரும்பியதும் ஈழத்தில் வீரசைவநெறி தழைத்தோங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

★ ★ ★ ★ ★



குருமணி
தன் தாள் வாழ்க

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய இடங்களிலும் வீரசைவ நெறியைப் பின்பற்றியவர்களையும், பின் பற்ற ஆர்வம் கொண்டுள்ளவர்களையும் ஒன்றிணைத்து ஈழத்தில் அகில இலங்கை வீரசைவ மகா சபை ஒன்றினை ஆரம்பித்து வைத்தார். அத்துடன் வீரசைவநெறிவளர்ச்சிக்காக ''வீரசைவம்'' என்ற பத்திரிகையையும் சிறிது காலம் நடாத்தி வந்தார்.

இத்துடன் இவரால் வெளியிடப்பெற்ற சிறப்பு நூல்களாக வீரசைவ நித்தியகர்மவிதி, இலிங்கோபநிடதம், இட்டலிங்கபூசாதிரட்டு, துர்வாத தூரிகரணம், வீரசைவம் அல்லது இலிங்காயதம் ஆகியன அடங்கும். சன்னிதானமவர்களால் திருக்குடமுழுக்கு (கும்பாபிசேகம்) செய்யப்பெற்ற கோயில்களாக வீரபத்திரகுரு சுவாமி கோவில் காங்கேசன்துறை (குரக்கன்துறை), முனீஸ்வரன்கோவில் யாழ் கோட்டை, ஐயனார் கோவில் யாழ் வண்ணார்பண்ணை, மீனாட்சியம்பாள் கோவில் யாழ்பண்ணை, வைரவர் கோவில் யாழ்.அரசினர் வைத்தியசாலை,சிவன் கோவில் கிளிநொச்சி உருத்திரபுரம், முத்துமாரியம்மன் கோயில் அளவெட்டி வடக்கு, நாகவரத நாராயணர் தேவஸ்தானம் அளவெட்டிதெற்கு, ஐயனார் கோவில் அளவெட்டி வடக்கு, சின்ன முத் மாரியம்மன்கோவில்அளவெட்டி வடக்கு, வீரபத்திரர் கோவில் பன்னாலை விழிசிட்டிவைரவர்கோவில் பன்னாலை வல்லுவத்தை, வைரவர் கோவில் மாவை கொல்லன்கலட்டி வைரவர் கோவில் மாவை சடச்சப்பை, நரசிங்கவைரவர்கோவில் காங்கேசன்துறை, முத்துமாரியம்மன்கோவில் காங்கேசன்துறை (முதலிவளவு), சிவன்கோவில் காங்கேசன்துறை (வைத்தியலிங்க மடம்) பிள்ளையார் கோவில் கீரிமலை தீர்த்தக்கரை, ஞான வைரவர்கோயில் (வல்லிபுரம்) உரும்பராய் கிழக்கு, வைரவர்கோவில் தெல்லிப்பளை (கவணாவத்தை), பிள்ளையார் கோவில் மட்டக்களப்பு சங்கமான்கண்டி.

மேற்குறிப்பிட்ட கோவில்கள் விளங்குகின்றன. மேலும் சன்னிதானமவர்களிடம் வீரசைவ கிரியா நெறிகளையும் பயின்றவர்களும் குருப்பட்டாபிஷேகம் பெற்றவர்களும், இலிங்காங்க சாமரஸ்ய தீட்சை பெற்றவர்களும் பலர்.

குருமகா சன்னிதானமும் அவர்தம் குருபரம்பரையினரும் வண்ணை ஐயனார் கோவில் உரிமைப்பூசகராகவும் பணியாற்றி வந்துள்ளார்கள். அத்தோடு அவ்வாலயத்தில் இருந்து நல்லூர் கந்தசாமி கோவிலின் தேர்த்திருவிழாவின்போது அடியார்களுடன் சன்னிதானம் அவர்களும் சென்று தேர்வடம் தொடுவது நடந்துவந்த மரபாகும்.

வீரசைவ குருமகா சன்னிதானமவர்களின் புகழ் வீரசைவ ஜனனபூமியாகிய இந்தியாவின் (ஐந்து) பஞ்சாசாரிய வீரசைவ மதபீடங்களுக்கும் பரவலாயிற்று, இதனால் கீரிமலை இரேணுகாசாரியார் மடத்திற்கும் இந்திய வீரசைவ மடங்களுக்குமிடையே நெருங்கிய பிணைப்பு ஏற்பட்டது.

வீரசைவ சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்களின் வேண்டுகோளின்படி சிறிது காலம் சன்னிதானம் அவர்கள் கோணேஸ்வரர் கோவில் பூசையும் செய்து வந்தார். வீரசைவர்களால் அர்ச்சிக்கப்பட்டவற்றுள்கோணேஸ்வரர்கோயில் மட்டக்களப்பு திருக்கோவில், அதற்கு அண்மையில் உள்ள கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில், காங்கேசன்துறை வீரபத்திர குருசுவாமி கோவில், அளவை முத்துமாரியம்மன் கோவில், உருத்திரபுரம் சிவன் கோவில், வண்ணை ஐயனார் கோவில், யாழ் கோட்டை முனீஸ்வரன் கோவில் குறிப்பிடத்தக்கவை.

யாழ்ப்பாணத்திலுள்ள வீரசைவ வழிபாட்டுத்தலமாக விளங்கும் காங்கேசன்துறை வீரபத்திரகுருசுவாமிகளின் ஆலயத்தையும், அகில இலங்கை வீரசைவ குருமகாசன்னிதான இரேணுகாச்சிரமத்தையும் தரிசிப்பதற்காக இராமேஸ்வரத்தில் இருந்தும் பெங்களூரில் இருந்தும் முறையே ஜங்கமவாடிமட பீடாதிபதி குருசித்த சுவாமியவர்களும், அந்தர் ஜோதிசி வேதமூர்த்தி வீரய்யசுவாமி சாஸ்திரிமுத் அவர்களும் வருகை தந்திருந்தார்கள். அவர்கள் ஆச்சிரமத்தின் செயற்பாட்டினையும், குருமகாசன்னிதானம் வீரசைவ பெருநெறியில் செயற்பட்டதிறனையும் வியந்து பாராட்டினார்கள்.

> அகில இலங்கை வீரசைவ குருமகாசன்னிதானம் அவர்களுக்கு வீரசைவ அடியார்கள் அனைவரும் சேர்ந்து வைரவிழா என்னும் பெருவிழாவை 1977ஆம் ஆண்டு செய்து குருநாதனை போற்றி நின்றார்கள். அவரது ஐக்கியத்தின் பின் பேரனாராகிய டக்டர் சிவஸ்ரீ கி. உருத்திரபுரேஸ்வரக்குருக்கள் சன்னிதானமாக விளங்குகிறார்கள்.

அகில இலங்கை வீரசைவ குருமகாசன்னிதானம் ஸ்ரீ ஐயம்பிள்ளைச் சிவாச்சாரியாரவர்களின் பெருமையினையும் ஈழத்தில் வீரசைவ நெறியை வளர்க்கும் வீரத்தையும் அறிவாற்றலையும் கேள்வியுற்ற இந்திய ஸ்ரீ இரம்பாபுரி வீரசிங்காசனாதீஸ்வர ஜகத்குரு பிரசன்ன இரே

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைச் சிவாச்சாரியார்

## நினைவு மலர்

# வீரசைவம் ஒரு நோக்கு

சைவத்தின் உயரிய படிநிலையே வீரசைவம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். சைவம் சிவசம்பந்தமுடையது. இது சைவசமயமென்னும் பெரும்பரப்பின் ஒரு பகுதியாகவும் அறு வகை மதங்களுள் முதன்மை பெற்றும் விளங்குகிறது. சிவமே சைவத்தின் முதற்பரம் பொருள் என்பது பேரறிவாளர் கூற்று.

தொன்மை மிக்க சைவம் சிவனின் அருட்பொலிவாகிய இலிங்க வழிபாட்டை நிறைவோடு பற்றி நிற்பதாகும். சிவனின் அருட்குறியே இலிங்கமென்னும் பொருந்தும். மொகஞ்சதாரோ கரப்பா சிந்து வெளி அகழ்வாராய்ச்சியில் பெறப்பட்ட இலிங்கங்கள் சிவ சம்பந்தமான வேறு பல படிமங்கள் சைவத்தின் வரலாற்றுக்கு முற்பட்டஆதி நிலையையும் புராதன சைவத்தின் செல்வாக்கையும் எடுத்துக்காட்டும்.

இத்தகு பெருமை வாய்ந்த சைவம் பாரத நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியாலும் தத்துவ ஞானிகளின் வேறுபட்ட சிந்தனைகளினாலும் அரசியல் சமூக பொருளாதாரப் பின்னணியினாலும் சில உட்பிரிவுகளை ஏற்க வேண்டியதாயிற்று. அவை சைவ சித்தாந்தம் காஷ்மீர சைவம், வீரசைவம் என்பனவாம் இவை, அடிப்படையில் வேறுபடினும் சிவபரத்துவத்தை ஏற்றுக் கொள்வனவேயாகும்.

வீரசைவத்தில் ''வீர'' என்ற சொல்லை சைவத்தோடு இணைத்ததின் காரணத்தை ஆராயவேண்டும். 'சிவம்' என்ற மூலப்பொருள் - செம்பொருள் சீற்றம் கொண்டு தோற்றிய போது சிவம் எனப்பட்டது என்ற முடிபிற்கு வந்து சிவமாகிய வெளிப்பட்ட அச்சிவப்பொருளைச்சார்ந்து வீர வாழ்க்கை வாழ்ந்த சான்றோர்கள் சென்றதுறை வீரம் பொலிய நின்ற துறையாகலான் வீரசைவம் எனப் பெயர் வந்தது என்ற கூற்று இங்கே சிந்திக்கப்பாலது.

## சிவஸ்ரீ

ணுக வீரகெங்காதர சிவாச்சாரிய மகா சுவாமிகள் அவர்கள் இரம்பாபுரிக்கு வருகை தருமாறு வேண்டிக்கொண்டார்கள். இரேணுகாசிரம குரு மகாசன்னிதானமவர்களும் இவ்வேண்டுகோளை ஏற்று இரம்பாபுரிக்குப் புறப்பட்டார்கள். குரு மகாசன்னிதானம் அவர்களுடன் சென்ற அன்பரொருவர் தமிழ்நாட்டில் குருமகாசன்னிதானத்தின் பாதங்கள் பதிந்தவுடன் நடந்ததைப் பின் வருமாறு வருணிக்கிறார்;

குருமகா சன்னிதானமவர்களுடன் நானும் சென்றேன். இராமேஸ்வரத்தில பெருஞ்சிறப்புடன் விளங்கும் வீரசைவ ஜங்கமவாடி மடமும், கும்பகோணத்தில் பெரியமடமும் எமது குருமகா சன்னிதானத்திற்கு வழங்கிய கௌரவமும் மரியாதையும் எழுத்தில் வருணிக்க முடியாதவை.

மைசூர், பெங்களூர், உஜ்ஜயினி போன்ற பல இடங்களுக்கும் சன்னிதானம் அவர்கள் விஜயம் செய்தார்கள். ஆங்காங்கே உள்ள வீரசைவ மடங்களின் பீடாதிபதிகள் நமது குருமகாசன்னிதானம் அவர்களை பூரண மரியாதைகளுடன் வரவேற்று உபசரித்தார்கள்.

இந்திய நாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு ஈழந்திரும்பிய குருமகாசன்னிதானத்திற்கு வீரசைவ அன்பர்களால் பெரும்வரவேற்பு அளிக்கப்பட்டது. வீரசைவ குருமகாசன்னிதானம் ஈழந்திரும்பியதும், அவரின் இரம்பாபுரி வருகையை மனத்தகத்தே இருத்திக்கொள்வதற்காகவும் ஈழம்வாழ் வீரசைவ அன்பர்களின் வீரசைவ நெறியை மேலும் பிரகாசமடையச் செய்வதற்காகவுமாக ஸ்ரீ இரேணுகாசாரியார் சிவாவிக்கிரகத்தையும் அதனோடு சம்பந்தப்பட்ட பிற படிமங்களையும் இரம்பாபுரி வீரசிம்மாசன பீடாதிபதி அவர்களால் அன்பளிப்பாக அனுப்பிவைக்கப்பட்டன.

இவ்வாறு உடல், பொருள், ஆவி அனைத்தையும் வீரசைவ நெறிக்காகவும் அந்நெறியை ஈழத்தில் தழைத்தோங்கச் செய்யவும் அர்ப்பணித்த நமது ஈழவள நாட்டின் குருமகா சன்னிதானம் சிவாகம பாஷ்கர பூஷணம், கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரம பீடாதிபதி 108 வது பட்டம் சிவஸ்ரீ சிவசிதம்பரப்பிள்ளை ஐயம்பிள்ளைச் சிவாச்சாரியார் அவர்கள் 12-05-1989 இல் ஆயிலிய நட்சத்திரத்தில் சிவ ஐக்கிய மகாசமாதியடைந்தார்கள்.

குருமகா சன்னிதானத்தின் திருவடி போற்றி அவர்கள் சென்ற செந்நெறியில் நாம்அனைவரும் நின்று வீரசைவ நெறியை வளர்ப்போமாக.

பெரிய புராணத்தில் அடியார் பெருமையினைக் கூறும் பாடலாகிய ''ஆரம் கண்டிகை ஆடையும் கந்தலே'' என்ற பாட்டில் வரும் ''வீரம்'' என்றசொல்லிற்கும் மேற்கூறிய பொருளைக் கொள்ளலாம். சிவபக்தன் இராவணேஸ்வரன் ஒன்பதுகோடி இலிங்கங்கள் பிரதிஷ்டை செய்ய சங்கல்பித்து தன்வாழ்நாளில் ஆறுகோடி இலிங்கங்களை பிரதிஷ்டை செய்து மிகுதி மூன்று கோடி இலிங்கங்களையும் அண்ணனின் வேண்டுகோளின் படி தம்பி விபீடணன் பஞ்சாசாரிய குருமாருள் ஒருவரான வீரசைவ ஜகத்குரு இரேணுக சிவாச்சாரியாரவர்களைக் கொண்டு ஒரே முகூர்த்தத்தில் மூன்று கோடி இலிங்கங்களையும் பிரதிஷ்டை செய்வித்தான் எனவும் அக்காலம் தொட்டே ஈழத்தில் வீரசைவம் விளங்குகின்றது எனவும் அறியக்கிடக்கிறது.

பின்னர் ஆரியர்களினது வருகையினாலும் அவர்களது வருணாசிரம கோட்பாடுகளினாலும் வெறுப்படைந்த சில பேரறிஞர்களும் தத்துவ ஞானிகளும் நால்வருண உயர்வுதாழ்வுகளைக் கண்டு வெகுண்டெழுந்தனர். வழிபாட்டுக்கு நால்வருணம், பஞ்சசூதகம், மொழி ஆகிய உயர்வுதாழ்வு பேதங்கள் இல்லையெனவும் சிவனது ஐம்பெரும் கொள்கைகளையும், ஆறு நிலைகளை எண்வகைகாப்புக்களையும் தவிர்நத வேறுநிலைகளை ஏற்கமுடியாதெனவும் கூறி பழைய சைவத்தின் கொள்கைகளை உறுதியாக பற்றி நின்றனர். ஆரியர் வருகையினால் மாற்றம் அடைந்ததே இன்றைய சைவம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச்சிந்தனைப் புரட்சிக்கு வித்திட்டவர்களுள் முன்னணியில் திகழ்ந்தவர்கள் இரேவணாராத்திரியார், மருளாராத்திரியார், பண்டிதாராத்திரியார், ஏகோராமராத்திரியார். விசுவாராத்திரியார், என்னும் பஞ்சாசாரியர்களாவர். 12-ம் நூற்றாண்டுக்குரியவராகக் க, தப்படும் பிராமண குலத்தில் பிறந்த பெம்மான் பசவேசுவரர் தனது பூணூலை களைந்து இலிங்கதாரணமுடையவராகி பஞ்சாசாரியார் அவர்களுடைய கருத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு வீரசைவ நெறியை கன்னடப் பகுதியில் மீண்டும் புதுப்பொலிவுடன் பரப்பினார். பின்னர் ஆந்திரம், தமிழ்நாடு, ஈழநாடு எங்கும் மீண்டும் பரவலாயிற்று. இக் காலத்திலே இலிங்காயத நெறிக்கு வீரசைவம் என்னும் பெயர் வழங்கலாயிற்று,

வீரசைவ நெறியைக் கைக்கொண்டொழுகுபவர்கள் புரட்சி உளளங் கொண்டவர்கள், சமூக மாற்றத்தை விரும்புகிறவர்கள் எல்லோரும் சமம் என்ற மேன்மையான இதயங்கொண்டவர்கள் சிவனே உலகத் தோற்றத்திற்குக் காரணமானவரென்றும் இலிங்க வழிபாடே சிறந்ததென்றும் உறுதியாக நம்புகிறவர்கள். இவர்கள் இலிங்கத்தை நெஞ்சில் தரித்திருப்பதினால் இவர்களை நடமாடும் கோவில் என்றால் மிகையாகாது. மொகஞ்சதாரோ, கரப்பா நாகரிகம் இவ்வழக்கத்தை உறுதிப்படுத்துகின்றது.

வீரசைவ நெறியில் நான்கு நிலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஞானம், செயல். பக்தி, பாவனை என்பன. இந்நான்கும் ஒன்றோடொன்று இணைந்தும் நிறைவு செய்தும் துணைபுரிகின்றன. வீரசைவம் வேதங்களை விட ஆகமத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கிறது. புராணங்களில் உள்ள மெய்மையை இது ஏற்றுக் கொள்கிறது. வீரசைவ ஞானிகளின் உபதேசங்கள் வீரசைவத்துக்கு உந்து சக்தியாக விளங்குகின்றது. சித்தாந்தசிகாமணி, பிரபுலிங்கலீலை ஆகியன வீரசைவத்தின் சிறந்த தமிழ் நூல்களாகும்.

வீரசைவத்தின் தத்துவம் ''சக்தி விசிட்டாத்துவைதம்'' என அழைக்கப்படும். இது சக்தியினதும் சிவத்தினதும் ஒன்றுபட்ட தன்மையைக் குறிக்கும் இறைவனும் ஆன்மாவும் பிரிக்கமுடியாத ஒருமைப்பாடுடையன என்பது இதன் கொள்கை. ஆன்மா சிவனின் ஒருபகுதி அது சிவனில் இருந்து வெளிப்பட்டு மீண்டும் அவரிடமே ஐக்கியமடைகின்றதென்பது வீரசைவத்தின் மூல தத்துவம்.

வீரசைவத்திற்கு குரு இலிங்க சங்கம வழிபாடு மிகமுக்கியமானது. குரு ஆன்மீக விடுதலைக்கு வழிவகுப்பவர், இலிங்கம் - சிவம் ஆன்மாவின் இலட்சியம் சிவனுடன் இரண்டறக் கலந்து அத்துவித நிலையில் வீடு பேறடைதல், சங்கமம், அவனருள் பெற்ற அடியார் கூட்டம் என்பதே. இந்நிலையை அடைவதற்கு சில அடிப்படைச்செயல் முறைகளை வீரசைவம் கூறுகிறது. இவை பஞ்சாசாரம் (ஐவகை ஒழுக்கம்) அஷ்டாவரணம் (எண்வகைக்காப்பு) ஷட்தலம் (அறுநிலைகள்) என்பவை.

அவை முறையே

| | | |
|---|---|---|
| ஐவகை ஒழுக்கம் | - | பஞ்சாரம் |
| 1. இலிங்க ஒழுக்கம் | - | இலிங்காசாரம் |
| 2. தன்னிறுத்தல் | - | சதாசாரம் |
| 3. சிவநெறி நிற்றல் | - | சிவாசாரம் |
| 4. தாழ்வெனும் சைவ ஒழுக்கம் | - | பிரத்தியா சாரம் |
| 5. சைவக்குழு நெறிநிற்றல் | - | கணாசாரம் |

எண்வகைக் காப்பு (அஷ்டாவரணம்)

| | |
|---|---|
| 1. குரு | 5. உருத்திராக்கம் |
| 2. இலிங்கம் | 6. மந்திரம் |
| 3. சங்கமம் | 7. குருவின் திருவடிதூநீர் |
| 4. திருநீறு | 8. பிரசாதம் |

அறுவகை இணைப்பு ஷட்தலம்

| | | |
|---|---|---|
| 1. மெய்யுணர்வு | : | பக்தித்தலம் |
| 2. முயற்சி | : | மகேசத்தலம் |
| 3. அறிவு | : | பிரசாதித்தலம் |
| 4. இயற்கைஉணர்வு | : | பிராணலிங்கத் தலம் |
| 5. செயல் | : | காரணத்தலம் |
| 6. ஒன்றுபடுதல் | : | ஐக்கியத்தலம் |

என்பனவாகும்

மேலும் வீரசைவர்கள் சிவஐக்கிய சமாதியடைந்தால் தொன்றுதொட்டே அவர்களை இருத்தி பூர்வக்கிரியையாக வழிபாடு செய்து சமாதிவைப்பார்கள்.

சீரியலிங் கத்தொழிலே சேர்ந்து சிவாசார
தாரி பிரியாமற் றானடைந்து - பேரருளா
லாண்டசிவ லிங்கத்தடங்குஞ் சரணனுக்கே
யீண்டிறக்கும் சூதகமேயில்.

வீராகமம் 123 தமிழ்)

இவர்களுக்கு ஆசௌசம் இல்லை என்பது மேல் காணும் பாடலால் தெளிவாகிறது. இங்கே வீரசைவ நெறிபற்றிச் சுருங்கக்கூறியவற்றைத் தொகுத்து நோக்கும்போது வீரசைவநெறி எல்லோராலும் பின்பற்றக் கூடிய எளிதான நெறி என்பதும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை தன்னகத்தே கொண்டு மானுடத்தை நெறிப்படுத்தும் நல்லதொரு ஆற்றுப்படை எனக் கொள்ளலாம். வீரசைவம் பற்றிய சிறிய இக் கட்டுரையில் வீரசைவம் பற்றிய முழுமையான தகவல்களைத் தர இபலவில்லை. இக்கட்டுரையின்விரிவைசித்தாந்தசிகாமணி பிரபுலிங்கலீலை, திருமந்திரம் முதலிய நூல்களிலும் பன்னிரு திருமுறைகளில் ஆங்காங்கேயும் காணலாம்.

பாருலகத்தோர் வாழ்க பரமர்தன்னடியார்
வாழ்க
சீர்பெறு மன்னை சுற்றந்திகழவே
வாழ்க வாழ்க
கூர்மழு வேந்துங்கையோன் குருமலர்ப்
பாதம் போற்றும்
வீரசைவத்தோர் வாழ்க விண்ணவர்
வாழ்கத் - தானே

பஞ்சமடம் பன்னீராயிரம் மகா மடத்திற்கும்
குருலிங்க சங்கமத்துக்கும்
அல்லமாப்பிரபு தேவர்க்கும்
சிவசரண சரணார்த்தி.
மாரி பெய்குக மனு நெறி ஓங்குக
பாரில் ஒன்சிவ பக்தர் கண்மல்குக
சீரின் மல்கும் சிவன் புகழ் வெல்குக
வீரசைவம் விளங்கிநின் றோங்கவே.

போற்றி

சிறப்பு மலர் தொகுப்பு:
ஐ. இரேவனாராத்திரியார்
செ. நடராசா
அ. மதிவதனனையா



(சி-9855)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் நூலகம்

# பெண் விடுதலையும் காகிதச் சட்டங்களும்

## இந்திய வரதட்சணை பிரச்சினைபற்றி ஒரு கண்ணோட்டம்

பிளேவியா அக்னீஸ் என்ற இந்திய பெண்ணியவாதியால் எழுதப்பட்ட **'பெண் விடுதலையும் காகிதச் சட்டங்களும்'** என்ற நூலில் இடம்பெற்ற கட்டுரைகளில் ஒன்றை இங்கு பிரசுரிக்கிறோம். இக் கட்டுரை, இந்தியாவில் வரதட்சணைப் பிரச்சினை சம்பந்தமாக அரசால் இயற்றப்பட்ட சட்டங்களை மதிப்பாய்வுசெய்வதோடு, இந்திய மகளிர் இயக்கங்களின் கண்ணோட்டங்களில் எழுந்துள்ள மாற்றங்களையும் எடுத்து விளக்க முனைகிறது.

**1961** வரதட்சணைத் தடுப்புச்சட்டம் மிகச் சிறிய ஒரு சட்டமாகும். அதில் எட்டுப் பிரிவுகளே உள்ளன. (திருத்தத்திற்குப் பின்னால் மேலும் இரு பிரிவுகள் சேர்க்கப்பட்டன) ஒட்டு மொத்தமாக இச் சட்டத்தில் பெரும் முரண்பாடுகளும் ஒட்டைகளும் உள்ளன. வரதட்சணை என்பது ''திருமணத்தைக் கருத்தில்கொண்டு, திருமணம் நடக்கும் காலத்தில் கொடுக்கப்படும் சொத்தாகும்'' என்ற குறுகிய வரையறையே இச் சட்டத்திற்கு உள்ளது. பணம், ஆபரணங்கள், ஆடைகள் ஏனைய பொருட்களை வரதட்சணையாக இச் சட்டம் பார்ப்பதில்லை. திருமணத்திற்காகக் கேட்கப்படுகின்ற திருமணத்திற்குப் பின்பு தரப்படுகின்ற பணத்தையும் வரதட்சணையாக இச்சட்டம் எடுத்துக் கொள்வதில்லை. இச்சட்டத்தின்படி வரதட்சணை வாங்குவது கொடுப்பது இரண்டுமே குற்றமாகும். வர தட்சணைக் குற்றம் பிணையத்தில் (ஜாமீனில்) விடத்தக்கது. சட்ட வார்த்தையில் சொல்லப்போனால் இதன் பொருள் இக் குற்றம் ஓர் அற்பக் குற்றமே. இதற்கு அதிகப்பட்சத் தண்டனை ஐந்துமாதச் சிறை அல்லது ஐயாயிரம் பணம் அல்லது இரண்டுமே. வரதட்சணை கோரும் கணவனைத் தண்டிப்பதற்கு அரசாங்கத்தின் முன் அனுமதி தேவை என்ற சரத்தானது பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகிறது. புகார்கள் ஓர் ஆண்டிற்குள் கொடுக்கப்பட வேண்டும். அதுவும் சம்பந்தப்பட்ட பெண்ணே தரவேண்டும்.

இச்சட்டத்தின் பயனின்மை பல வழிகளிலும் வெளிப்படுகிறது. பெரும்பாலும் இந்தச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்படுவதில்லை பதிவு செய்யப்பட்ட வழக்குகளிலும் குறைவான எண்ணிக்கையில்தான் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே இச்சட்டம் (வரதட்சணைக்கு எதிராக) ஒரு தடுப்புச் சுவராக இருக்கும் என்ற நோக்கம் முழுமையாகத் தோல்விக்குள்ளானது. சங்கராவ்க்கும் எல். வி. ஜாதவ் என்பவருக்கும் இடையிலான வழக்கில் தம்பதிகளை வெளிநாடு அனுப்ப பெண்ணின் பெற்றோர்களிடமிருந்து ஐம்பதாயிரம் ரூபாய் கேட்டது வரதட்சணை ஆகாது என பம்பாய் உயர் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. திருமணக் காலத்தில் இப்பணம் கேட்கப்பட்டது. அப்பொழுது பெற்றோர்கள் இப்பணத்தைத் தர மறுத்துவிட்டனர். திருமணத்திற்குப் பின்பு தருவதாகவும் சொல்லவில்லை. திருமணத்திற்குப் பின்பு சிறிதுகாலம் கழித்து இப்பணம் மீண்டும் கேட்கப்பட்டது. சட்டப்படி திருமண காலத்தில் திருமணத்திற்குப் பின்பு கொடுப்பதாக ஒப்புக்கொண்ட பணமே வரதட்சணையாகக் கருதப்படும். ஆகவே வரதட்சணை சட்ட விளக்கத்தின்படி, மேற்சொன்ன பணத்தை வரதட்சணையாகக் கருத முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. நீதிமன்றத்தின் இந்த அபத்தமான விளக்கம் சட்டத்தின் நோக்கத்திற்கு முற்றிலும் முரணானது.

இந்தியாவில் உள்ள பெரும்பாலான நகரங்களில் வரதட்சணைச் சாவுக்கு எதிரான மக்கள் இயக்கங்களை காண்கிறோம். இவற்றிற்கு பத்திரிகைகளும் நிறையவே விளம்பரம் தருகின்றன. வரதட்சணைச் சாவு அல்லது மணப்பெண் கொளுத்தப்படுவது என்பது இந்தியப் பெண்கள அதிலும் குறிப்பாக இந்துப் பெண்கள் அனுபவிக்கும் தனித்தன்மையுள்ள வன்முறை வடிவமாகும். தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் இது உணரப்பட்டுள்ளது. நீளும் இக்கொடுமைகளின் எதிர் விளைவுதான் அல்லது எதிர் வினைதான். குடும்பத்திற்குள் நடைபெறும் இந்த வன்முறையை மிகக் கடுமையானசட்டத்தின் மூலம் ஒடுக்க முயல்வதும். வரதட்சணைச் சாவை நிறுத்த முனைவதும் ஆகும். மிகப் பரவலாக நடைமுறையில் உள்ள இந்தப் பிரச்சினை மீது நடவடிக்கை எடுப்பதில் சிக்கல்கள் உள்ளன. மகளிர்இயக்கப் போராளிகளோ மிக மலினமான நேரத்தில் ஆய்வுசெய்து தீர்வுகளை முன்வைக்கிறார்கள். சட்டத்தை உருவாக்குபவர்களும் மலினமான தன்மைக்கு ஏற்பவே நடந்துகொள்கிறார்கள்.

1980ஆம் ஆண்டு, ஜூன் மாதம் பாராளுமன்ற உறுப்பினரான பிரமிளா தண்டவதே அவர்கள் இச்சட்டத்தின் சில முக்கியஓட்டைகளை அடைக்க ஒருதனிநபர் வரைவை (மசோதா)பாராளுமன்றத்தில்முன் வைத்தார். அது பாராளுமன்றத்தின் இரு அவைகளைச் சார்ந்த கூட்டுக் குழுவின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. அந்தக்குழு கீழ்க் காணும் முடிவுகளை முன் வைத்தது. அக்குழுவின் முடிவுகள் பின்வருமாறு: இந்தச் சட்டத்தில் வரதட்சணைபற்றிய விளக்கம் மிகக்குறுகியதாகவும், பயனற்றதாகவும் உள்ளது. இச்சட்டம் மிகக்கடுமையாக நடைமுறைப்படுத்தப் படவில்லை. பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நபர் இக்குற்றம் நிகழ்ந்த ஓராண்டுக்குள் புகார் கொடுக்க வேண்டும் என்ற விதி நடைமுறைக்கு சாத்தியமில்லாத ஒன்று. ஆறு மாத தண்டனை அல்லது ரூபா 5000 அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனைமுறை இக்குற்றத்தைத் தடுப்பதற்குப் போதுமானதாகவில்லை.

அக்குழுவின் பரிந்துரைகள் பின்வருமாறு: திருமணத்திற்காக அல்லது திருமணத்தைக் கருத்தில் கொண்டுஎன்ற விளக்கத்தை முழுக்கவே நீக்கிவிட வேண்டும். சீதனங்கள் வரதட்சணையாகஎடுத்துக்கொள்ளப்படாது என்ற சட்டப்பிரிவும், இச்சட்டத்தின்நோக்கத்தைப் பயனற்றதாக்கி விடுகிறது. மணப்பெண்ணுக்குத் தரப்படும் சீதனங்கள் கணக்கெடுக்கப்பட்டு அப்பெண்ணின்பெயரிலேயே பதிவு செய்யப்பட வேண்டும். திருமணம் முடிந்த முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் அப்பெண் இறந்து விட்டால் அந்தச்சீதனங்கள் பெண்ணின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அப்பெண் மணவிலக்கு (விவாகரத்து) பெற்றாலோ, அப்பொருட்களை அப்பெண்ணின் வசமே கொடுத்துவிடவேண்டும். சீதனங்கள் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகளுக்குப் பெயர் மாற்றப்படாமல் இருக்க வேண்டும். மணப்பெண் குடும்ப நீதிமன்றத்தின் அனுமதி பெற்று மாற்றிக் கொள்ளலாம். இந்தச் சட்டப்பிரிவுகள் சீதனங்கள் மீது மணப்பெண்ணின் உரிமையை உறுதி செய்கின்றன. வரதட்சணைத்தடுப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்தவரதட்சணைத்தடுப்பு அதிகாரிகள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

பெண்கள் திருமணச் சமயத்திலோ அல்லது அதற்குப் பின்னர் கணவனின் வீட்டிலோ தங்கள் விருப்பங்களைச் சுதந்திரமாகச் செயல்படுத்த முடியும் என்ற தவறான புரிதலிலிருந்தே இந்தப் பரிந்துரைகள் செய்ப்பட்டதாகத் தெரிகிறது. பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கு மணம் முடிப்பதில் காட்டும் அவசரம், எந்த விலைகொடுத்தாவது அவர்களைக் கணவன் வீட்டிலேயே இருக்கவைப்பது போன்ற அம்சங்களை இந்தப்பரிந்துரைகள் கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை. இந்த நாட்டில் பெரும்பாலான பெண்கள் தங்கள் சட்ட உரிமைகள் பற்றி எந்த ஒரு உணர்வும் இல்லாமல் இருக்கின்றனர். இந்த எதார்த்தத்தைப் பரிந்துரைகள் ஒதுக்கிவிட்டன.

துரதிருஷ்டவசமாக, 1984 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வரைவு (மசோதா) கூட்டுக் குழுவின் பரிந்துரைகளில் அடங்கியிருந்த சில நல்ல அம்சங்களை கணக்கிலெடுக்கத்தவறிவிட்டது. 'திருமணத்தைக் கருத்தில்கொண்டு (As ConsiderationfortheMarriage(என்றசொல் ஆட்சிக்குப்பதிலாக, திருமணத்திற்காக( in Connection with Marriage) என்ற சொல் ஆட்சியைக் குழு பரிந்துரை செய்தது. 'திருமணத்தைக்கருத்தில்கொண்டு' என்ற சொல்லாட்சியை நீக்குவதால் வரதட்சணை என்ற சொல்லை விரிவாக விளக்கப்படுத்த வாய்ப்பிருக்கிறது. பரிந்துரை இதனை உணர்ந்திருந்தது, திருமணச் செலவு, சீதனங்கள் மீது உச்சவரம்புக்குத் தடை விதிக்கவேண்டும் என்ற பரிந்துரைகள் சட்டத்தில் இடம் பெறவில்லை.

தண்டனையின் கால அளவை ஐந்து ஆண்டுகளாக உயர்த்தியது. அபராதத் தொகை ரூ. 10,000 அல்லது வரதட்சணைக்கு ஈடான தொகை என்ற மாற்றங்களும் இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். ஆனால் மணப்பெண்ணுக்கோ அல்லது மணமகனுக்கோ தரப்படும் சீதனங்கள் இந்தச் சட்டப் பிரிவுக்குள் வராது. புகார் செய்வதற்கான காலக்கெடு ஓர் ஆண்டாகயிருந்தது நீக்கப்பட்டது. இப்பொழுது அப்பெண்ணின் பெற்றோர்கள், சுற்றத்தார் அல்லது சமூகப் பணியாளர் இவர்களில் யார் வேண்டுமானாலும் அப்பெண்ணின் சார்பாக வழக்குத்தொடுக்கலாம். வரதட்சணை கோரும் கணவனை விசாரிக்க அரசாங்கத்தின் முன் அனுமதி தேவை என்ற விதி கைவிடப்பட்டது. இப்பொழுது நேரடியாக வழக்கு தொடரலாம்.

இந்தச் சட்டத் திருத்தத்தின் பாதிப்பை கணிப்பதற்குள் 1986இல் சட்டம் மீண்டும் திருத்தப்பட்டது. குறுகிய காலத்திற்குள் இம்மாதிரி வேறு சட்டங்கள் திருத்தப் படவேயில்லை. பாலியல் வன்முறைச் சட்டத்தைத் திருத்த 100 ஆண்டு காலம் ஆயிற்று. மணவிலக்கு குறித்த ஓரவஞ்சனைக் சட்டங்கள்(Discriminatory Laws) 1869இல் இயற்றப்பட்டது ஆனால் இன்று வரை அவற்றில் மாற்றம் செய்யப்படவில்லை. ஆனால் திடீரென அரசாங்கம் பெண்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்டு இரண்டுகால இடைவெளிக்குள்ளாகவே சட்டத்தைத் திருத்த முனைந்தது.

1986இல் செய்யப்பட்ட திருத்தம் சட்டத்தை மேலும் கடுமையாக்கும் நோக்கத்தில் செய்யப்பட்டதாகும். அபராதத் தொகை ரூ. 15,000ஆக உயர்த்தப்பட்டது. குற்றத்தை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு குற்றவாளியின் தரப்பிற்கு மாற்றப்பட்டது. வரதட்சணைக்குற்றம் பிணையில் (ஜாமீனில்) விட முடியாத குற்றமாக மாற்றப்பட்டது. வரதட்சணை பற்றிய பத்திரிகை விபரங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டது. பெண்ணின் சாவு ஐயத்துக்கிடமானதாக இருந்தால் அப்பெண்ணின் சொத்துக்கள் அவர் குழந்தைகள் பெயருக்கு மாற்றப்படும். குழந்தைகள் இல்லையென்றால் பெண்ணின் பெற்றோர்கள் வசம் திரும்ப ஒப்படைக்கப்படும்.

உண்மையில் கூட்டுக்குழு பரிந்துரைத்த அனைத்து ஓட்டைகளும் அடைக்கப்பட்டாயிற்று, ஆக வரதட்சணை-சாவை ஒழிப்பதற்கான ஓர் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. இந்தச் சட்டம் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் ஒரு திருத்தத்தைப் புகுத்தியது. அதன்படி 'வரதட்சணை - சாவு' ஒரு புதிய குற்றமாகச் சேர்க்கப்பட்டது. (S304B)

இந்தச் சட்டத் திருத்தங்களினால் எந்த ஒரு மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை. பெண்கள் கொளுத்தப்படுவது தொடர் கதையாகவே இருக்கிறது. பெரும் நகரங்களில் தற்கொலை, கொலை ஆகிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணமாகவே இருக்கின்றன மணப்பெண் அல்லது மணமகனை சுட்டி வரதட்சணையை சீதனம் என்ற பெயரில் கோரும் முறை தொடர்ந்து நடைபெறுகிறது பணம் கோரி மணப்பெண்ணை அவமானப்படுத்துவதும் தொடர்கிறது. பெற்றோர்கள் தம் சம்பந்தி வீட்டாரைக் கவருவதற்காகத் திருமணத்தின் போது ஊதாரித்தனமாக பெரிய தொகையைச் செலவிடுகின்றனர். (பெற்றோர்கள் சிலர் பெண்களின் படிப்பிற்கோ அல்லது அவர்களைச் சொந்தக் காலில் நிற்க வைப்பதற்கோ எந்த ஒரு செலவும் செய்யவில்லை) மணமகள் கோரும் சீதனங்களை வாங்கித்தர எப்பாடுபட்டாவது முயல்கின்றனர். அதற்குக் காரணம் தம் மகள் புகுந்த வீட்டிலிருந்து திரும்பி வந்து தங்களுக்கு ஒரு களங்கமாக இங்கு தங்கிவிடக்கூடாதுஎன்பதே. திருமணத்திற்குப் பின் பெற்றோர்கள் வீட்டில் தங்களுக்கு இடம் இல்லை என்பது தெரிந்த இளம்பெண்கள், புகுந்த வீட்டின் அவமானத்தையும் வன்முறையையும் பொறுக்கமாட்டாமல் அவசரப்பட்டுத் தற்கொலை செய்து கொள்கின்றனர் வரவிருக்கும் ஆபத்தை முன் உணர்ந்து பெண்கள் தங்கள் பெற்றோர்கள் உதவியினை நாடினாலும் பெற்றோர்கள் மீண்டும் கணவன் வீட்டிற்கே திருப்பிஅனுப்பிவிடுகிறார்கள்

வரதட்சணைப் பிரச்சினை திருமணமான நேரத்தில் எழுவதில்லை பெண் இறந்த பின்பே அப்பிரச்சினை எழுகிறது. அதுவும்கூட பெண்களின் இறப்பிற்குப் பழி வாங்கவும் சீதனங்களைத் திரும்ப பெறுவதற்குமே எழுப்பப்படுகின்றது. திருமணம் பற்றிய பெற்றோர்கள் கொண்டுள்ள பிற்போக்குத்தனமான, பழமைவாத அணுகுமுறைகளின் மரணத்தினால் எந்தவிதத்திலும் மாறிவிடப் போவதில்லை. தங்களது அடுத்த மகளுக்கு அதேஅளவு வரதட்சணை கொடுத்து ஒரு பையனை விலைக்கு வாங்கஉடனே தயாராகி விடுகின்றனர். வேலை வாய்ப்புத்திறமையை வளர்த்துக் கொள்ள விரும்புகின்ற, சுதந்திரமாக வாழ எண்ணம் கொண்ட அல்லது சாதிமத வேறுபாடு பார்க்காமல் திருமணம் செய்து கொள்ளவிரும்புகின்ற பெண்களுக்கு எதிராகப் பெரும் அளவு நிர்ப்பந்தங்கள் செலுத்தப்படுகின்றன. இம்மாதிரியான நேரங்களில் வரதட்சணைக்கு எதிராகக் கடுமையாக கூக்குரலிட்ட பெற்றோர்கள் கூட மனமுடைந்து, தங்கள் பிள்ளைகளைக் கைகழுவி விடுகின்றனர்.

நடப்பில் நிலவும் சமூக மதிப்பீடுகளை ஏற்றுக்கொண்ட நபர்களைமுன்னிலையாகக் கொண்டுதான் வரதட்சணைக்கு எதிரானஆர்ப்பாட்டங்களைஅடிக்கடி நடைபெறுகின்றன. மகளிர் இயக்க உறுப்பினர்களின்வாழ்க்கை முறை மதிப்பீடுகள், கருத்துக்கள் ஆகியவற்றின்மீது இவர்கள் முழுவெறுப்பைக் கொண்டிருப்பார்கள். இந்தக் காரணங்களினால் மகளிர் இயக்கப் போராளிகள் வரதட்சணை குறித்ததங்களதுநிலையைமறுமதிப்பீடுமனுசெய்யவேண்டியதுஆயிற்று. ''மனுசி'' பத்திரிகையில் திரு. மதுகிஷ்வர் அவர்கள் எழுதிய ''வரதட்சணை மதிப்புப் பற்றிய மறு சிந்தனை'' என்ற கட்டுரை

(13-ம் பக்கம் பார்க்க)

## கலா அ ழகுக் களஞ்சியம் அழைக்கிறது

ஆச்சரியப்படாதீர்கள்!
உங்கள் மனம் கவர்ந்த அழகு மாளிகை
பெஷன் ஹவுஸ்

## ★ கலா அழகுக் களஞ்சியம் ★

ஆக மாற்றமடைந்துள்ளது.
பெயரில் மாற்றம்! தரத்தில் ஏற்றம்!! விலையில் நிதானம்!!!
மீண்டும் நினைவூட்டுகிறோம்.

கலா அழகுக் களஞ்சியம்
65, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி-9854)



## பாரம்பரிய வீட்டுத் தயாரிப்புச் சுவையுடன் 1 மணிநேரத்துக்குள் அப்பம் தயாரிக்க

# அசல்!

இலகு அப்பக் கலவையை நாம் அறிமுகப்படுத்துகின்றோம். சிவப்புத் தீட்டற் பச்சை அரிசி கொண்டு தயாரிக்கப்படுவதால்

பாரம்பரிய வீட்டுத் தயாரிப்புச் சுவையுடனேயே வருகின்றது.

★ பக்கற்றில் உள்ள அப்பக் கலவையை செய்முறையில் கூறியது போல் கரைத்து 45 நிமிடங்களின் பின் வழமைபோல் சுட்டால் சுவையான அப்பம் கிடைக்கும்.

★ செய்முறை விபரமாக ஒவ்வொரு பக்கற்றினுள்ளும் உள்ளது.

★ ஒவ்வொரு பக்கற்றிலிருந்தும் 24 முதல் 26 வரையிலான சுவையான அப்பம் தயாரிக்கலாம்.
400 g பக்கற்றின் விலை ரூபா 35/- மட்டுமே. எங்கும் விற்பனையாகிறது.

★ மிகவிரைவில் குரக்கன் அப்பத்தையும் எதிர் பாருங்கள்.

தயாரிப்பாளர்கள்
TASTE LINE INDUSTRIES (PVT) LTD
No. 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம்.
(சி-9865)



# கொழும்பு ஸ்ரூடியோ

தொழில் நுட்பத்தில்
35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்
தரமான

★ Line, Half tone and Colour Blocks
★ றபர் சீல் Rubber Stamps
★ சில்க் ஸ்கிறின் Silk Screen
★ Re - copy பழைய படங்களில் இருந்து புகைப்படங்களைப் பெரிதாக்க

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் தரமாகப் பெற்றுக்கொள்க.

கொழும்பு ஸ்ரூடியோ
55, மணிக்கூட்டு வீதி, (சி-9571) யாழ்ப்பாணம்.



மீசாலை வடக்கு தட்டான்குளம் அருள்மிகு திருநீலகண்டப் பிள்ளையார் ஆலய



# வருடாந்த மகோற்சவ
# பூங்காவனத் திருவிழா

இறையன்புடையீர்!
நிகழும் பவ வருடம் ஆனித்திங்கள் 24-06-94 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் திருவிழா ஆரம்பமாகும்.
விசேட பூசையைத் தொடர்ந்து எம்பெருமான் வெளி வீதி உலா வந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

1 ஆலய மங்கள வாத்தியம்
சிவசாமி குழுவினர்

2 நாதஸ்வர இரட்டையர்கள்
V. K. கானமூர்த்தி V. K. பஞ்சமூர்த்தி தவில் வித்துவான்கள் P. கணேசன் S. குமார்
★ சிறப்புத் தவில் ஞானதிலகம் K. நித்தியானந்தம்

3 இளம் தவில் வித்துவான்கள்
பாபு - சிவசாமி குழுவினர் சங்கத்தானை

4 வில்லிசை மலேசியா, சிங்கப்பூர் புகழ் வில்லிசைப் புலவர் கலா விநோதன்
க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களின் கலைவாணர் வில்லிசைக் குழுவினர் அளிக்கும் "கண்ணகி" என்னும் பொருள் பற்றி வில்லிசை நடைபெறும்.

5 "இந்த மண் எங்களின் சொந்த மண்" புகழ் எஸ். ஜி. சாந்தன் குழுவினரின் இன்னிசை கானங்கள்
ஒலி, ஒளி இராசேஸ்வரி சவுண்ட் சேவிஸ் மந்துவில்

நண்பகல் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

இந்ததிருவிழாவில் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருளைப் பெற்று உய்யுமாறு அனைத்து மெய்யடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (சி-9861)

பூங்காவன உபயகாரர்
கே. பி. ஆர். ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

நூலகம் யாழ்ப்பாணம்

# முதலில் பாராளுமன்றத் தேர்தல்; டி. பி. யின் நிலைப்பாடு மாறியது ஏன்?

ஜனாதிபதித் தேர்தலா? பாராளுமன்றத் தேர்தலா? முதலில் நடத்துவதென்ற குழப்பத்தில் இருந்து டி.பி விஜேதுங்கா தீர்மானம் ஒன்றிற்கு வந்துவிட்டார். ஆனல், ஜனாதிபதித் தேர்தலின் முன் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதென்ற டி. பி. விஜேதுங்காவின் முடிவானது அரசியல் வட்டாரங்களில் பலருக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொடுத்துள்ளது. இதற்கு இத்தேர்தல் முடிவானது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே அடுத்த ஜனாதிபதி யார் என்பதை வெளிப்படுத்திவிடும் என்பதினாலேயே ஆகும்,

இந்தவகையில் கொழும்பு பி.பி.ஸி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளது போல் ''இது டி. பி. விஜேதுங்காவின் ஒரு துணிச்சலான முடிவு'' என்பதில் சந்தேகம் இல்லை. இதேசமயம் டி. பி. விஜேதுங்காவின் இம்முடிவானது அவரின் வழமையான அரசியல் பாணியில் அமைந்த முன்னுக்குப் பின் முரணான முடிவு என்றே கொள்ள முடியும்.

இவ்வ நடத்தினை ஒரு தேர்தல் ஆண்டாக டி. பி. விஜேதுங்கா வருட ஆரம்பத்தில் பிரகடனப்படுத்திய போது ஜனாதிபதித் தேர்தலா? பாராளுமன்றத் தேர்தலா முதலில் என்ற கேள்வி எழுந்தது. அப்பொழுது முதலில் ஜனாதிபதித் தேர்தலே என்ற நிலைப்பாட்டையே டி. பி. விஜேதுங்கா எடுத்தார். தேர்தல்கள் யாவும் உரிய காலத்தில் நடத்தப்படும் என அவர் வெளிப்படையாகவே அறிவித்தும் இருந்தார்.

டி. பி. விஜேதுங்கா இவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுத்தமைக்கு சீரான அரசியல் நடைமுறை எனக் காரணம் கூறப்பட்டதாயினும் ஐ. தே. கவில் காணப்பட்ட உள் முரண்பாடே காரணம் என அரசியல் விமர்சகர்கள் கருதினர். பாராளுமன்றத் தேர்தல் முதலில் நடத்தப்படுமானால் ஐ. தே. கவிற்குள் புகைந்து கொண்டிருந்த உட்கட்சி முரண்பாடு, வேட்பாளர்களை நியமனம் செய்வதோடு பற்றி எரியும் பிரச்சினையாக உருவாகும், எனவும் அது ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்கும் எனவும் கருதப்பட்டது. இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்பட்டால், கட்சி வேட்பாளர் பட்டியலில் இடம்பெறும் நோக்கில் தேர்தலில் சகலரும் ஒத்துழைக்க முன்வருவர் என முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், தற்போதைய டி. பி. விஜேதுங்காவின் முடிவானது, முன்னைய கருத்துக்களை அவர் மாற்றிக்கொண்டு விட்டார் என்றே கொள்ள முடியும். இம்மாற்றத்திற்கு கட்சிக்குள்ளும் அதேசமயம் வெளி அரசியலிலும் குறிப்பாக சுதந்திரக் கட்சியின் நிலைமையும் காரணங்களாக இருக்கலாம் என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடு

இதில் முக்கியமான காரணியாக சுதந்திரக்கட்சியின் தலைமை குறித்து அக்கட்சிக்குள் எழுந்துள்ள குழப்ப நிலையை அரசியல் அவதானிகள் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். சிறிமாவோ பண்டாரநாயக்காவா? சந்திரிகா குமாரணதுங்காவா? கட்சியின் தலைமையை ஏற்பது குறித்து எழுந்துள்ள சர்ச்சையானது அக்கட்சியின் பல மட்டங்களிலும் பலமான கருத்து பேதங்களை ஏற்படுத்தியுள்ளது. இது மக்கள் மத்தியில் கட்சிக்குள்ள செல்வாக்கைப் பாதிக்கும் கட்டம் வரையில் வந்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவோ பண்டாரநாயக்காவை கட்சி தெரிவு செய்துள்ளபோதிலும் இதில் அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் திருப்தி இருப்பதாக இல்லை. அத்தோடு. சந்திரிகா குமாரணதுங்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்பட்சத்திலேயே எதிரணியினரின் வெற்றி பிரகாசமாகவுள்ளது என பத்திரிகைகளும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன. இதேவேளை கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் சந்திரிகா குமாரணதுங்காவை ஆதரிப்பதாக இல்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்விடயத்தில் விட்டுக்கொடுப்பிற்குத் தான் தயாராக இருப்பதாகக் கூறுகின்ற போதும், அவரின் நடவடிக்கைகள் முழுமையாக அதில்இருந்து பின்வாங்கவில்லை என்றே கூற வைக்கின்றது. இதனை அண்மையில் 'ராவய' போன்ற பத்திரிகைகளின் போக்கை அவர் வன்மையாகச் சாடியதில் இருந்து புரிந்து கொள்ளமுடியும். ராவய போன்ற பத்திரிகைகள் சந்திரிகா குமாரணதுங்காவிற்கு ஓரளவு சார்பான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன என்பது இங்கு முக்கியமானதாகும்.

இதேசமயம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள உட்கட்சி முரண்பாடானது அக் கட்சிக்குள் பிளவுகளைக் கூட ஏற்படுத்தலாம் எனவும் டி. பி. யால் எதிர்பார்க்கப்படுகின்றது. அனுராவை ஆதரிப்போரும், ஹெலஉறுமய குழுவினரும் இதனை மேற்கொள்ள முடியும். இதற்கான நம்பிக்கையை அனுரா வழங்கியிருக்கலாம். இவ்வாறு ஒரு பகுதியினர் வருவார்களே ஆனால், அவர்கள் ஐ. தே. க. வில் இருந்து வெளியேறுபவர்களின் இடத்தை நிரப்புவார்கள் என்பது டி. பி.யின் எதிர்பார்ப்பு ஆகும்.

ஆகையினால் பிளவை ஏற்படுத்துபவர்களுக்கு தமது நிலை குறித்து நம்பிக்கை ஊட்டுவது அவசியமானதாகும். இதற்கு ஜனாதிபதித் தேர்தலின் முன் பாராளுமன்றத் தேர்தலை நடத்தின் அவர்கள் நம்பிக்கை பெற வாய்ப்புண்டு.

இந்நிலையில் எதிரணியினர் தமது முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலை அறிவிப்பதானதுஅரசியல் அனுகூலங்களை ஈட்டமுடியும் என டி. பி. விஜேதுங்கா கருதியிருக்கலாம். ஆனால். இதற்கும் மேலாக எதிர்க்கட்சியினரின் முரண்பாட்டை டி. பி. விஜேதுங்கா பயன்படுத்த முற்பட்டுள்ளமைக்கு வேறு ஒரு காரணமும் அரசியல் விமர்சகர்களினால் தெரிவிக்கப் படுகின்றது

டி. பி. விஜேதுங்கா சந்திரிகா குமாரணதுங்காவை ஜனாதிபதித் தேர்தலில் சந்திப்பதற்கு அஞ்சுவதாகக் கூறப்படுவதே அதுவாகும். இந்நிலையில், எதிர்க்கட்சிதரப்பில்குழப்பம்நிலவும் வேளையில் தேர்தலை அறிவித்து சுதந்திரக்கட்சிக்குள் தலைமைப் போட்டியை விரிவாக்குதல் மூலம் ஐ. தே. கவின் தேர்தல்வெற்றியை உறுதிசெய்யலாம் எனவும் இதன்பின்னர் ஜனாதிபதித்தேர்தலில் பலமான நிலையில் யாரையாவது சந்திக்கலாம் என அவர் திட்டமிட்டிருக்கலாம் அதாவது பாராளுமன்றத் தேர்தலில் உறுதி செய்யப்படும் வெற்றியானது ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வெற்றி வாய்ப்பைத் தேடிக் கொடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஐ.தே.கவிற்குள் முரண்பாடு

இவ்வாறாக எதிர்க்கட்சித் தரப்பில் உள்ள உள் முரண்பாட்டைப் பயன்படுத்த டி. பி. விஜே துங்கா எண்ணம் கொண்டிருப்பினும், ஐ. தே. கவிற்குள் உள்ள உள் முரண்பாடே அவரைப் பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்குத் தீர்மானம் எடுக்கவைத்திருக்கும் என்பதே வலுவான காரணியாகவுள்ளது என அரசியல் விமர்சகர்களின் பலமான அபிப்பிராயமாகும்.

இவ்வாண்டைத்தேர்தல்ஆண்டாக டி. பி. விஜேதுங்கா அறிவித்தபோது ஐ. தே. கவிற்குள், இன்றுள்ளது போல் முரண்பாடுகள் வெளிப்படையான மோதலாக இருக்கவில்லை. ஐ. தே. கவிற்குள் அன்றும் முரண்பாடுகள், அணிகள் என்பன இருந்தாலும் அவை உட்கட்சி ஜனநாயகம் என்ற ரீதியில் மறைக்கப்பட்டிருந்தது. ஆனால், தென்மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து, ஐ. தே. கவிற்குள் ஏற்பட்டமுரண்பாடானது என்றுமில்லாதவாறு கட்சியை பலவீனப்படுத்தியுள்ளது.

பிரேமதாசா அணி என்றும் ஜே. ஆர். அணி என்றும் டி. பி. விஜேதுங்காவின் அணி எனவும் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடானது அண்மையில் ஓர் சமரசத்தை எட்டும் கட்டத்தில் இல்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது.

## காமினி வருகையும் விரிசல் அதிகரிப்பும்

இம் முரண்பாடானது காமினி திசாநாயக்காவை மீண்டும் பாராளுமன்றத்திற்குள் கொண்டு வர ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா மேற்கொண்ட முயற்சியின் போது உச்சக்கட்டத்தை அடைந்தது இதன் காரணமாக ஐ. தே. கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேன கூரே பதவி விலகும் அளவிற்கும் நிலைமை சென்றது.

ஆனால் கூரே பதவி விலகியதுடன் பிரச்சினை தீரவில்லை காமினி திசாநாயக்காவைபாராளுமன்றஉறுப்பினர் ஆக்குவதற்கும், அமைச்சராக்குவதற்கும் பகீரதப் பிரயத்தனத்தை டி. பி. விஜேதுங்கா மேற் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இதில் அவர் வெற்றிபெற்றதாக வெளிப் பார்வைக்குத் தெரிகின்ற போதும் அவர் பல எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாகவே இருந்தது.

இவ் எதிர்ப்பானது தற்பொழுது கூட ஒடுக்கப்பட்டு விட்டதாகவோ, அன்றி களையெடுக்கப்பட்டுவிட்டதாகவோ இல்லை. பல அமைச்சர்கள் அமைச்சரவைக்குள் காமினியின் வருகையை இன்றும் எதிர்க்கின்றனர். இவர்களில் சிலர் அமைச்சரவை கூட்டங்களை புறக்கணிக்க திட்டமிடுவதாகவும் அறியமுடிகின்றது.

## பிரேமதாசா குடும்பத்தின் எதிர்ப்பு

இதே சமயம், பிரேமதாசா குடும்பத்தினரும் டி. பி. விஜேதுங்கா அரசிற்கெதிரான ஒரு பலமான சர்ச்சையை உருவாக்கி வருகின்றனர் பிரேமதாசா கொலையில், சந்தேகம் தெரிவித்துள்ள அவர்கள், அரசாங்கம், புலன் விசாரணையில் அக்கறை காட்டுவதாக இல்லை என்பதோடு, மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை திருப்தியில்லை எனக்கூறி அதை நிராகரித்தும் உள்ளனர்.

அத்தோடு, அரசிற்கெதிரானதும், அவமானப்படுத்தும் நடவடிக்கையாக அரசாங்கம் அமைத்த பிரேமதாசாவின் சிலை, பிரேமதாசாவைப் பிரதிபலிக்கவில்லை எனக் கூறியதோடு, புதிய சிலை ஒன்றையும் திறந்து வைத்துமுள்ளனர். இந் நிலையானது, டி. பி. விஜேதுங்காவின் போக்கில் பிரேமதாசா குடும்பத்தினர் திருப்தி அடையவில்லை என்பதோடு, அவருக்கு எதிராகச் செயற்படவும் தயாராக உள்ளனர் என்பதை வெளிப்படுத்துபவையாகவுமே உள்ளன.

## கட்சியில் யாரை நம்புவது

இவ்வாறாக கட்சிக்குள் எழுந்த உள் முரண்பாடு காரணமாக கட்சிக்குள் யாரை நம்புவது, எவரை நம்பிச் செயற்படுவது என்பது குறித்து பலத்த சந்தேகம் டி.பி.விஜேதுங்காவிற்கு அண்மைக் காலத்தில் எழுந்தது.

அவருக்கு இவ்வாறான சந்தேகங்கள் உருவாவதற்கு நியாயபூர்வமான காரணிகளும் உண்டு. எடுத்துக்காட்டாக கொழும்பு மத்திய தொகுதி ஐ தே.கட்சியின் அமைப்பாளராகவுள்ள கூரே இம்முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிட்டினால் போட்டியிடுவேனே ஒழிய கட்சி வேலைகளில் ஈடுபடப்போவதில்லை என்று தனது ஆதரவாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

இதே போன்றதொரு நிலையே மத்திய மாகாணத்திலும் உருவாகியுள்ளது. கடந்தவாரம் ஜனாதிபதி டி.பி, விஜேதுங்கா செய்த அமைச்சரவை மாற்றத்தினால் மத்திய மாகாண ஐ தே.க அமைப்பாளரும் அமைச்சருமான அலுத் அலுவிகார அதிருப்தியடைந்தார். இதன் காரணமாக டி.பி விஜேதுங்கா மாற்றி வழங்கிய அமைச்சர் பதவியை நிராகரித்திருந்தார். பின்னர் ஐ. தே. க. வின் முக்கிய பிரமுகர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக இணைந்து கொண்டார். ஆயினும், அம்முரண்பாடு தீர்ந்ததாகக் கொள்ள முடியாது.

ஏனெனில், அலுத்விகாரவிற்கும் டி. பி. விஜேதுங்காவிற்கும் ஏற்பட்டுள்ள முரண்பாடு அமைச்சுப் பதவியுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல மத்திய மாகாணத்தில் ஐ. தே. கட்சிக்குள் எழுந்த முரண்பாட்டின் வெளிப்பாடாகும்.

ஐ. தே. கட்சிக்குள் மத்திய மாகாணத்திலுள்ள முரண்பாட்டின் வெளிப்பாடாகவே ஐ.தே:கட்சியைச் சேர்ந்த நுவரேலிய நகர பிதா பதவி விலக வேண்டும் என மத்திய மாகாணசபையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த பிரேரணை வெற்றி பெற்றுள்ளமையாகும். இரகசிய வாக்கெடுப்பு மூலம் இத் தீர்மானம் நிறைவேறறப்பட் மையானது ஐ, தே. க. விற்குள் இன்றுள்ள முரண்பாட்டிற்குச் சிறப்பானதொரு உதாரணமாகும்.

இவ்வாறாக உட்கட்சி முரண்பாடுகளின் உச்சக்கட்டம் தான் டி.பி. விஜேதுங்காவை ஜனாதிபதித் தேர்தலின் முன் பாராளுமன்றத் தேர்தலை நடத்தும் முடிவை எடுக்கத் தூண்டியது என்று கூறலாம். பாராளுமன்றத் தேர்தலின் முடிவின்மூலம் ஜனாதிபதித் தேர்தலை ஊகிக்க முடியுமாயினும், பாராளுமன்றத் தேர்தல் நடைபெறின் டி பி. விஜேதுங்கா தீர்க்கமான முடிவுகளைமேற்கொள்ள அது உதவும் என்பது மட்டும் நிச்சயம்.

அத்தோடு இலங்கை பூராவும் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தலுக்கு இதன் மூலம் வழி ஒன்றைத் தேட முடியுமா என்பதும் டி.பி.விஜேதுங்காவின் சிந்தனையாக இருக்கலாம். ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஐ.தே.

**ஜெயராஜ்**

கட்சி பெறும் பட்சத்திலேயே அது சாத்தியமாகக் கூடியதாகும் ஆனால் இதற்கான வாய்ப்பு அரிதாகவே உள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் முதலில் நடத்தப்படுமானால் ஐ தே. க. விற்குள் இன்றுள்ள நிலையில் வேட்பாளர் பட்டியல் தயாரிப்பதில் சிக்கல்கள் எழக்கூடும். சிலர் கட்சியை விட்டு விலகவும் கூடும் ஆயினும் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னர் தனது நிலை வலுவாகும்என்றே டி.பி.விஜேதுங்கா கருதுகின்றார். அவ்வாறு தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெறுவார்கள் ஆயின் தனது நிலை மேலும் உறுதிப்படும் என அவர் கருதுவதில் தவறில்லை.

அதாவது இவ்வெற்றியின் மூலம் தனது கொள்கையுடனும், தனது அணியினருடனும் தான் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள முடியும்என டி.பி. விஜேதுங்கா கருதுவதாகத் தெரிகின்றது. இதன் மூலம் ஜனாதிப

(13 ஆம் பக்கம் பார்க்க)

# 31-ம் நாள் நினைவலைகள்....



## செல்வி நிரஞ்சலா இராசநாயகம்

(வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி, கணக்கியல் கணக்காய்வுக் கற்கை நெறி மாணவி)

மலர்வு: 15 . 10 . 1973

உதிர்வு: 25 . 05 . 1994

நினைக்கப் பதறுகிறது நெஞ்சம் - நீ
நிஜமாக எம்முடன் இல்லைத்தான் என்பதை!
நினைவுகள் எங்குமே தங்காமல்
உந்தனையே தேடித் தேடி....
நிரஞ்.... எங்கள் உயிர்க் கண்மணியே!
உனைப் பார்க்க வேணும் போல் தவிப்பு....
நோய் கொண்டு பறித்து விட்டான் உனை வல்லவன்
கலங்கிப் போனவர்களாய் நாமிங்கு....
வண்ண மலரே! ஏனம்மா மீளாத கண் வளர்த்தாய்
உனை இழந்து முப்பத்தியொருநாளென
நீளும் தினங்கள் சோகக் கதை சொல்ல - உன்னால்
மூடாத விழிகளில் கண்ணீரே நிரந்தரமாகிப் போனதால்
"துயரங்களே எமக்கு உறவாகி நிற்கிறது!".

91/8, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(சி-9863)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 11-7-1936

மண்ணின் மடியில் 24-6-1992



## திருமதி மகேஸ்வரியம்மா சிவலிங்கம்

கண்ணை இமை காப்பதுபோல் காலமெல்லாம்
எமைக்காத்துநின்றீர்களே-அம்மா
காலனின் கொடுஞ்செயலால் எமை காதலுடனை
துறந்து போனீர்களே ------
வருடமிரண்டானதம்மா
கண்மணி குள் உங்களுருவும் நெஞ்சுக்குள் உங்களன்
பும் சுமந்து

திருமலை

கலங்கித்தவிக்கும்
அன்புக்கணவன்
பிள்ளைகள், மருமக்கள்.

(8633)

# 31-ம்நாள் நினைவலைகள்

மண்ணில் 73-10-15

விண்ணில் 94-05 25



## செல்வி நிரஞ்சலா இராசநாயகம

காலப் பெருவெளியில் கரிபடர்ந்த ஓவியமாய்
- நீளும் திசையெங்கும் நீ கிடந்தாய் - ஊதி
உனையெழுப்ப ஒருவர் துணையின்றி - நீள் துயிலில்
பாதி விழி திறந்தும் பார்க்காமல் கிடக்கின்றாய்.

கணக்கியல் கணக்காய்வுப் பயிற்சிக்கல்லூரி,
நிர்வாகத்தினர், விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்.

கந்தர்மடம். (சி-9869)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## ஐயம்பிள்ளை செலவராசா

(27 ஸ்ரீ 9063 லொறி உரிமையாளர்)

(பலாலி தெற்கு, வசாவிளான்)

தோற்றம்: 31-07-1944

மறைவு: 04-07-1993

அப்பா...... உங்கள் அன்பும் அரவணைப்பும் இனி இல்லையே எங்களுக்கு. அழுகிறோம்.. ஊமையாய் .. ஆறவில்லையே அப்பா...... எங்கள் நெஞ்சும் ஆண்டொன்று ஆனபோதும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி. பிள்ளைகள்,
மருமகன்

உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

(8638)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## சத்தியாக்கிரகம் செய்த அத்வானி கைதானார்

(டில்லி)

டன்பிறேக்கர் சதுக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்த பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானியும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அக் கட்சியின் தொண்டர்களும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜம்மு - காஷ்மீர் பகுதியில் உள்ளவோடா மாவட்டத்தில் பதற்றத்தை தவிர்த்து சட்டம், ஒழுங்கு நிலைமையை சீர்செய்ய வேண்டுமென்றும் இந்தப் பகுதியை கலவரப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்றும் மத்திய அரசை வலியுறுத்தியே இப் போராட்டத்தில் இவர்கள் குதித்தனர்.

### பெண் விடுதலை

பெரும் சர்ச்சைக்கும் பொது விவாதத்திற்கும் உள்ளானது.

பெண்களின்வரதட்சணைச் சாவில் பெண்ணின் பெற்றோர்களுக்கு உள்ள பங்கினை மகளிர் இயக்கங்கள் கேட்கத்துவங்கிவிட்டன. வரதட்சணை -எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவது மட்டுமே முடிந்த, வெளிப்படையான எளிய ஒரே கோரிக்கையாக இனிமேலும் இருக்கமுடியாது, வரதட்சணைக்கு எதிரான இயக்கம் தவறான புரிதலில் இருக்கின்றது என்பதை மகளிர் இயக்கங்களும் தனிநபர்களும் உணரத் துவங்கிவிட்டனர். பெற்றோர்கள் சொத்தில்பெண்களுக்குக்குரிய பங்கையும் வரதட்சணை பிரச்சினையையும் தொடர்புடுத்த வரதட்சணை எதிர்ப்பு இயக்கம்தவறிவிட்டது புகுந்த வீட்டில் பெண்களுக்கு எந்த அதிகாரமும் இல்லாத நிலையேஅவர்களுக்கு. எதிரான வன்முறைக்குக் காரணமாய் அமைகிறது தன் பெற்றோர்கள் வீட்டிலிருந்து வரதட்சணையோ சீதனமோ பெற்று வராத பெண்களே அதிக வன்முறைக்கும் அவமானத்திற்கும் உள்ளாகின்றனர்.

### கணித

மாணவர்களாகிய எங்களாலேயே உருவாக்கப்பட்டவை எனக்கூறி பெருமிதம் கொண்டனர்.

கணித ஆசிரியரான கிருஷ்ணகுமாரிடம் கேட்டபோது எமது கல்லூரியில் கணிதம் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அனைவரும்கோப்பாய் கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில் உபகரணங்களைக் கையாள்வது, மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பது, போன்றவற்றில் போதிய பயிற்சியினை பெற்றுள்ளோம். ஒவ்வொரு ஆசிரியரும் தாம் வகுப்பறையில் கற்பித்தவற்றை இங்குவந்து பரிசோதனை வாயிலாக நிரூபித்துக் காட்டுகின்றனர். இதனால் மாணவர்கள் வித்தியாசமான ஓர் கல்வியை இங்கு கற்கின்றனர். இத்திட்டம் எமக்குப் பூரண வெற்றியை அளித்துள்ளது என்பதற்கு அண்மைக் கால பரீட்சைகளில் எமது மாணவர்கள் பெற்ற புள்ளிகளே சான்று பகர்கின்றன என்றார் சற்று பெருமிதத்துடன்.

### தமது தலையில்

சர்வாதிகாரப் போக்குள்ள சாலேயின் பேராசை காரணமாக வெடித்துள்ள இப்போரின் முடிவு எத்தகையதாக இருந்தாலும் வெளியார் தலையீட்டால் இணைப்புக்கள் ஏற்படுத் தப்பட்டு பௌதீக ரீதியாக ஒன்றாக்கப்பட்டாலும், அடிப்படை முரண்பாடுகள் தீராத வரை இவை நடைமுறைச் சாத்திய மற்றவை என்றே யேமன் பாடம் கற்பிக்கின்றது. அது போல சாலே போன்றோரின் சருவாதிகாரப் போக்கிற்கு வரலாறுஎவ்வகையில்பதிலளிக்கும் என்பதும், இனி யேமன் கற்றுத்தரப் போகும் பாடமாக அமையப் போகின்றது. அதுவரை யேமனிய மக்கள் போரின் சுமையை தாங்க வேண்டியே இருக்கப் போகின்றது,

## கரும்புலிகள் உருவப்படம்

பதினான்கு கரும்புலிகளின் உருவப்படங்களை மாவட்ட, கோட்ட மாவீரர் பணிமனைகளில் அன்பளிப்பைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## பரீட்சை

1994 யூலை மாதம் முற்பகுதியில் நடைபெறவிருந்த தேசிய கல்வி நிறுவன கல்வி டிப்ளோமா 1ஆம், 2ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் ஆகஸ்ட் மாதம் 10, 11, 12, 13ஆம் திகதிகளில் நடைபெறுமென சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த. வில்வநாதன் அவர்கள் அறியத் தருகின்றார்.

### சாதாரண

யூடாக பரீட்சைத் திணைக்களத்திற்கும் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

பாடசாலைகள் அனைத்திற்கும் இதற்கான விண்ணப்பப்படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைகள் பரீட்சைத்திணைக்களத்தின் தரவுக் கிளையுடன் உடனடியாக தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (பா)

### முதலில்

தித்தேர்தலில்பலமானதொரு நிலையை தன்னால் அடைய முடியும்என அவர் எண்ணுவாராயின்அர்த்தமும் உண்டு.

மேலும், பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதன் மூலம் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்துக் கொண்டவர்கள் விரும்பியோவிரும்பாமலோ கட்சியின் வெற்றிக்கு உழைக்க வேண்டிய அவசியம் உண்டு. இந்நிலையில்கட்சி தேர்தலில் வெற்றி பெறுமானால்,ஜனாதிபதித்தேர்தலில் கட்சிவெற்றி பெறுவதற்கு இதுஅடித்தளமாக அமைந்து விடுவதற்கானவாய்ப்புக்களும் அதிகம்.

இந்நிலையில் தான் அக்கினிப்பரீட்சை என்று தெரிந்து கொண்டும் டி. பி. விஜேதுங்கா பாராளுமன்றத்தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளார்என்றுகொள்ளலாம். அவரைப் பொறுத்து பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி என்பது அவரது எதிர்காலப் பதவியை உறுதிப்படுத்துவதாகவும், இத் தேர்தல் தோல்வி என்பது, இருமாதங்களின் பின் விளையக்கூடிய முடிவை முன் கூட்டியே அறிவிக்கும் எதிர்வு கூறலாகவும்அமையும். இது ஜனாதிபதித் தேர்தல் குறித்துஅவர் அலட்டிக்கொள்ளாமலும், மண்டையை உடைத்துக் கொள்ளாமலும் அரசியல்துறவறம்பூண்டுவிட கூட உதவவும் கூடும். அவ்வாறானதொரு நிலை உருவாகுமானால்அது ஐ. தே. கவிற்குள் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஒருவரைத்தேடி அலையவேண்டியநிலையைக் கூட ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து

# காணாமற் போன 10,000 பேரின் பெற்றோர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைகளின் போது காணாமற் போன 10,000 இளைஞரின் நிலைமை பற்றி ஆராய்வதற்காக சுயாதீன விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது உட்பட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து காணாமல் போனோரின் பெற்றோர் கொழும்பில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை காணாமற் போனவர்களின் பெற்றோர் அமைப்பு மேற்கொண்டுள்ளது. இப்போராட்டம் பின்னர் ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட உள்ளது.

சிறிலங்காவில் காணாமல் போயிருக்கும் சுமார் 10,000 பேரின் நிலைமை பற்றி ஆராய சுயாதீன விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும். காணாமல் போனோரின் குடும்பங்களில் அகதிகளாயுள்ளோருக்கும் அழிக்கப்பட்ட வீடு வாசல்களுக்கும் நட்ட ஈடு பெற்றுக் கொடுக்க வேண்டும். தற்போது சிறையில் வாடிக் கொண்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை காணாமல்போனவர்களின் பெற்றோர் அமைப்பு மேற் கொண்டுள்ளதாக இவ் வமைப்பின் தலைவர் விஜேதாச பத்திரண தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக காணாமற்போன 10,000 பேரின் பெற்றோர்களை கொழும்பிற்கு அழைத்து ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தண்ணீர் தாங்கி மீது இருந்து

## சீனித்தொழிற்சாலை ஊழியர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

பெல்வத்தையில் உள்ள சீனித் தொழிற்சாலை ஊழியர்கள் ஐவர் அங்குள்ள தண்ணீர்த்தாங்கி மீது இருந்து சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சீனித் தொழிற்சாலையில் யானை துரத்தும் காவலாளிகளில் ஐந்து பேரே இவ்வாறு உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு மாதத்தில் இருபத்தாறு நாட்கள் வேலை வழங்கப்பட்டு வந்ததாகவும் தற்போது அது இரண்டு நாட்களால் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்தே இச்சாகும்வரை உண்ணாவிரதத்தை இவர்கள் அனுஷ்டித்து வருவதாகவும் தெரிய வருகிறது. தமக்கு இருபத்தாறு நாட்கள் வேலை வழங்குவதாக நிர்வாகம் உறுதியளிக்கும்வரை தாம் இந்த சாகும்வரை உண்ணாவிரதத்தை கைவிடப்போவதில்லை என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ராணுவத்திற்குவழங்கப்பட்ட ரொட்டியில் நஞ்சு

### 8 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

அம்பாறை மாவட்டத்திலுள்ள சாந்திமலை இராணுவ முகாமில் இராணுவத்தினருக்குவழங்கப்பட்டரொட்டியில் விஷம் கலந்திருந்ததாகவும் அதை உண்ட இராணுவத்தினரில் 8 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும்சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது.

மேற்படி இராணுவ முகாமில் இராணுவத்தினர் உண்ட ரொட்டியில் எவ்வாறு விஷம் கலந்திருந்ததுஎன்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

## தீவகத்தில் சிவில் நிர்வாகம் பொலிசார் கவனிப்பர்

(கொழும்பு)

வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தீவுப் பகுதிகளில் சிவில் நிர்வாக பொறுப்புக்களை பொலிசார் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் பெரியளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும்;

சிவில் நிர்வாகத்தை தீவுப் பகுதியில் அமுல்படுத்துவதற்கென பயிற்சியளிக்கப்பட்ட பொலிசார் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறையில் தற்போது இயங்கிவரும் ஒரு பொலிஸ் நிலையத்திற்கு மேலதிக பொலிசார் அனுப்பப்பட்டு தொடர்ந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் பொது மக்களின் சிவில் நிர்வாகம் பொலிசாரினால் கையாளப்படும் எனவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

### வலிவடக்கு

அதிகாலை 5.50 மணியளவில் வலிகாமம் வடக்கு வான்பரப்பில் சுற்றிவந்த இரு குண்டு வீச்சு விமானங்கள் 4 பாரிய குண்டுகளை வீசியது அதில் ஒன்று அளவெட்டி மேற்கு அரசடியில் உள்ள நாகலிங்கம் மகேஸ்வரன் என்பவரது வீட்டின்மீது வீழ்ந்து வெடித்ததில் அவரது வீடுசிதறிமுற்றாகசேதம்அடைந்தது ஏனைய 3குண்டுகளும் வீட்டின் அருகில் வீழ்ந்து வெடித்ததில் பாரிய குழிகள் காணப்படுகின்றன இந்த வருடம் மாசி மாத நடுப்பகுதியிலும் இந்த வீடு விமானத் தாக்குதலுக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இதேதினம் 7.30 மணியளவில் பெரியவிளான், பண்டத்தரிப்பு பகுதிகளுக்கு வந்த இவ்விரு குண்டுவீச்சு விமானங்களும் அதற்கு உதவியாக வந்தஉலங்கு வானூர்தி ஒன்றும்சேர்ந்துகொண்டுமேற்படி பகுதி எங்கும் கலிபர் தாக்குதலை மேற்கொண்டதுடன், குண்டு வீச்சினையும் மேற்கொண்டன, இந்த வேளை பெரியவிளான், விளாவெளி என்ற இடத்தினை நோக்கி குண்டு வீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசின.

இதனால் மோசஸ் செல்லத்துரை என்பவரது வீடும் ஆயுர்வேத வைத்தியசாலையும், மோசஸ் பாக்கியநாதன் என்பவரது வீடும் நாகரத்தினம் தருமதேவன் என்பவரது வீடும் பலத்த சேதமடைந்தன. உலங்கு வானூர்தி தாக்குதலால் வீட்டுக் கூரைகள்பல சேதமடைந்துள்ளன. (41)

## மெய்வல்லுநர் போட்டி

நல்லூர் கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

### ஜனாதிபதியின்

இறுதியானது என்றும் இதனை மாற்றுவதற்கில்லை என்றும் ஜனாதிபதி அவர்களிடம் தெரிவித்து விட்டதாக அறியவருகிறது.

இதற்கிடையே பாராளுமன்றத் தேர்தலை ஆகஸ்ட் 15 க்கும் 30 க்கும் இடையே நடத்துவதென டி. பி விஜேதுங்கா முடிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது.

### தேர்தல்

இச்சந்திப்பில் பொதுத் தேர்தல் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வருகை தரவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்டு வரும் இலவச கண் சத்திர சிகிச்சை முகாமில் கற்றா கண் சத்திரசிகிச்சை செய்வதற்குபெயர்களை பதிவு செய்தவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு சாவகச்சேரி மாவட்ட சுகாதார அலுவலகத்திற்குவருகை தருமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (மு)

## சேதமுற்றகட்டடங்கள் கணக்கெடுப்பு

(தொல்புரம்)

வடக்கு கிழக்கு மாகாண சபையினர், கடந்த காலங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமுற்ற வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றிற்கான கணக்கெடுப்பு ஒன்றினை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக அறியவருகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மேற் குறித்த சேதங்கள் சம்பந்தமாக கணக்கெடுப்பு ஒன்றினை அண்மையில் நடத்தியிருந்தது. இந்த கணக்கெடுப்பு முறையில் திருப்தி அற்ற நிலை தென்படுவதாகவும் மீண்டும் புதிதாக கணக்கெடுப்பை நடாத்த மாகாண சபையினர் தீர்மானித்துள்ளனர் எனவும் இவை சம்பந்தமான படிவங்கள் வந்து சேர்ந்ததும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதெனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (41)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-6-24
வெள்ளி இரவு

8.01- கலைமஞ்சரி-நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாகும் நூல்கள்
1. மண்ணின் கனவுகள் - சிறுகதைத் தொகுதி
2. தேதி குறிப்பிடச் சொல்வோம்- கவிதைத் தொகுதி
அதனையடுத்து சிறுகதை - ''இருள்'' சிறுகதையை அடுத்து கவிதைகள்.
1. பருந்தைத் துரத்தி குஞ்சை காத்த அன்னை பூபதியாள்.
2. கருகிய கலைக்கோயில்
8.30-செய்திகள்
8.40-அரசியல் அரங்கம் ''ஆவணப்படுத்தப்பட்டுள்ள அக்கிரமங்கள்''
8.50-வாத்திய கானங்கள்.

1994-6-25
சனி காலை

7.02-மாவீரவணக்கம்
7.15-நீங்கள் கேட்டவை
7.30-செய்திகள்
7.35-பத்திரிகைச் செய்திகள்
7.40-நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# ஆறு சு.க. பாராளுமன்ற உறுப்பினர் ஐக்கிய தேசியகட்சியில் இணைந்தனர்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளனர்.

இவர்கள் தமது பாராளுமன்ற அங்கத்தவர் பதவியில் இருந்தும் தமதுகட்சியானசிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்தும் விலகிக் கொள்வதற்கு முடிவு செய்துள்ளார்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜினதாஸ நியதபால, டாக்டர் நெவில்பெர்னாண்டோ, லயனல் ராஜபக்ஸ, மொகமட்கலீம்இசாக், திலக்கருணாரட்ண, பிரதீப் அத்தங்கம ஆகியோரே ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்டவர்களாவர்.


விற்பனைக்கு
கொழும்பு
சீமெந்து, லாட்பிளேட்
காவடி மார்க் கற்பூரம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
C. M. சுகந்தினி
புதி. 309--157,
K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.
(8630)


### தீவிர சோசலிச கொள்கைக்குள்

## சுதந்திரக்கட்சியை தள்ள சக்தி வாய்ந்த குழு சூழ்ச்சி

(கொழும்பு)

மாக்சிச லெனினிச கோட்பாடுகளைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கும் சக்தி வாய்ந்த குழுவொன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தீவிர சோசலிச கொள்கையைக் கடைப்பிடிக்கச் செய்வதற்கு சூழ்ச்சி செய்து வந்துள்ளது. இந்த சூழ்நிலையில் நாம் மௌனமாக இருக்க விரும்பவில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில்இணைந்து கொண்ட 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கை மூலம் தெரிவித்தனர்.

அவ் வறிக்கையில் மேலும்; சிறிலங்கா கதந்திரக் கட்சியைப் பலப் படுத்துவதற்கும் அதன்தனித்துவத்தைப்பேணுவதற்கும் தாம் அயராது பாடுபட்டு வந்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

சுதந்திர சந்தை பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையில் கட்சிக்குள்ள ஈடுபாட்டில் தாங்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்ததாகவும்,

மாக்சிச லெனினிச கோட்பாடுகளை தீவிரமாக கடைப்பிடிக்கும் சக்தி வாய்ந்த குழுவொன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தீவிர சோசலிச கொள்கையைக் கடைப்பிடிக்கச் செய்வதற்கு சூழ்ச்சி செய்து வந்துள்ளார்கள் என்று தாங்கள் கருதுவதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கட்சியின் நலனுக்காக பெரும் பங்களிப்பு செய்துள்ள அதன் முன்னாள் தேசிய அமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்காவை கட்சியில் இருந்து வெளியேற்றுவதே இந்தச் சூழ்ச்சியின் முதலாவது கட்டமாகும் என்றும் மாக்சிச அடிப்படையிலான கட்சிகளுடன் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கை இதுவாகும் என்றும், இது மேற்கொள்ளப்பட்டதும் கட்சியின் தேசிய தன்மையை பிரதிபலிக்கும் பெருமைமிக்க கைச்சின்னம் கைவிடப்பட்டது என்றும் அவர்கள் கூறினர்.

தொடர்ச்சியாக முதுகில் குத்தப்படும் இத்தகைய அவல சூழ்நிலையில் மௌனமாக வாழாவிருப்பது தமக்கு கஷ்டமாக இருந்தது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## அநுரா ஆதரவாளர்கள் நினைத்தளவு சேரவில்லை

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சுலபமாக வெற்றி கிட்டும் என்பதற்கான அறிகுறியே ஆறு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் இந்த கட்சி மாற்றம் என காட்ட ஐ.தே.க. அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஆனால் இது உண்மையல்ல. எதிர்பார்த்த அளவு அநுரா ஆதரவாளர்கள ஐக்கிய தேசியக் கட்சியில் சேரவில்லை என்பதே உண்மையாகும் என பி பி. ஸி. நேற்று தெரிவித்தது.

மேலும் இலங்கையில் அரசியல் வரலாற்றில் சிறப்பு மிக்கநாள் இது என யூ என். பியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரா குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் இன்று அல்லது அடுத்த கிழமை அறிவிக்க இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் யூ. என். பிக்கு சுலபமாக வெற்றி கிட்டும் என்பதற்கான அறிகுறி இந்தக் கட்சி மாற்றம் என்பதாக காட்டமுனைகிறதுயூ என். பி. ஆனால் இது முற்றான உண்மையல்ல கட்சிமாறி இருக்கும் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும் சிறிலங்க சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் மகன் அனுரா பண்டாரநாயக்கா அவர்களுக்கு மிகநெருங்கிய சகாக்கள். அனுரா பணடாரநாயக்கா அவர்கள் கடந்த நவம்பர் மாதம் எஸ். எல். எவ். பியில் இருந்து கட்சி மாறி யூ. என். பியில் சேர்ந்தார் அவருடன் சேர்ந்து இன்னும்பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இறுதியில் அனுராவை பின்பற்றி யூ. என். பியில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை எதிர்பார்க்கப் பட்டதிலும் குறைவு.

கட்சிமாறி ஆளும் கட்சியில் சேர்ந்திருக்கும் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அடுத்த தேர்தலில் யூ என். பி. வேட்பாளர்களாக போட்டியிட அனுமதிக்கப்படுவார்கள் என்ற உறுதி வழங்கப்பட்டிருக்கிறது.

பொதுத் தேர்தல் எப்போது நடக்கும் என்பது இன்னமும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை இப் போதைய பாராளுமன்றம் இன்று வெள்ளிக்கிழமை அல்லது அடுத்த வார தொடக்கத்தில் கலைக்கப்படலாம் என பரவலாக நம்பப்படுகின்றது. இதற்கு ஆரூடப்படி நல்ல நேரம் பார்க்கப்படவேண்டும் என்பதில் சோதிடர் ஒருவர் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கிறார் என்பதை விஜயசேகரா கோடிகாட்டியுள்ளபோதிலும் சோதிடரின் ஆலோசனை வெளியிடப்படுவது வழமை அல்ல என பி. பி. ஸி மேலும் குறிப்பிட்டது.

## வட-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு போதாது

(கொழும்பு)

''வட-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அந்த மண்ணில் இரு பிரிவினரும் யுத்தம் நடத்திக் கொண்டிருப்பதனால் இப்பிரச்சினையை அரசியல் ரீதியாக மட்டும் தீர்த்துவைக்க முடியாது'' இவ்வாறு மகாவலி அபிவிருத்திஅமைச்சர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்

கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் ''இனப்பிரச்சினையை தனியாக இராணுவ ரீதியாகவோ அன்றி அரசியல் ரீதியாகவோ தீர்க்கமுடியாது ஏனெனில் இவ் விவகாரத்தில் சமூக, அரசியல் வரலாற்றுப் பிரச்சினைகள் இழையோடியுள்ளன'' எனவும் தெரிவித்துள்ளார்.

### பரிசளிப்பு விழா

கோப்பாய் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 8. 30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி செ. நவரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் அவர்களும், கௌரவ விருந்தினராக வைத்திய கலாநிதி திரு. வை. தியாகராஜா அவர்களும் பங்குபற்றுவர். திரு. க. இளஞ்செழியன் சிறப்பு விருந்தினராக பங்குபற்றுவார்.

## கோமாரியில் 98 தபால் பொதிகள்

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் யாழ். தபால் திணைக்களத்திற்கு 98 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளது. தபால் பொதிகள் கப்பலில் இருந்து இன்று இறக்கப்படும்.

## பரிசளிப்பு விழா

குமுதன் கல்வி வளர்ச்சிக் கழக பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் இன்று பிற பகல் 4 00 மணிக்கு சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெறும். இதற்கு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கோப்பாய் கோட்டப் பொறுப்பாளர் செல்வி சந்திரவேணி தலைமை வகிப்பார்.

★ ★ ★

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு வருடாந்த பரிசளிப்புவிழா அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் நடைபெற உள்ளது. இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் அவர்கள் கலந்துகொள்வார்.

## விஞ்ஞான பட்டமாணி

மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் திறந்த பல்கலைக் கழகம் யாழ். பிராந்திய நிலையத்திற்கு வந்துள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் இன்றும், நாளையும் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும்படி யாழ். பிராந்திய இயக்குநர் கேட்டுள்ளார்.

## விமானம் நோட்டம்

(குருநகர்)

சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த 'அவ்ரோ' விமான மொன்று நேற்று காலை 9.25 மணியளவில் குடாநாட்டின் பல பகுதிகளை பெரு வட்டமிட்டு நோட்டம் பார்த்துச் சென்றது. (21)


### காபந்து

சர்கள் ஆகியோர் அதிகாரமற்றவர்கள் ஆகிவிடுவர் ''கபினற்'' அந்தஸ்துள்ள அமைச்சர்களே தொடர்ந்தும் அதிகாரமுள்ளவர்களாக இருப்பர் இக் காபந்து அமைச்சரவைக்கு காமினி தலைமை தாங்குவார் எனவும் அதன் மூலம் காமினி அதி உயர் செல்வாக்கு உடையவராக இருப்பார் என்றும அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.


A/L 96
தூய - பிரயோக கணிதம்
திரு. கிருஷ்ணா
ஆரம்பம்:
25-06-1994 பிற்பகல் 2மணி
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
(சி-9874)



யாழ் ஸ்ரீதரில் இன்று முதல்



STEVEN SPIELBERG இயக்குதலில்
RICHARD ATTENBOROUGH நடித்த
JURASSIC PARK
(அறிவியல் சார்ந்த திகில் படம்)
தினசரி 4-00, 6-00 மணி,
சனி, ஞாயிறு 10-30, 4-00, 6-00 மணி
பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்பு கொண்டால் காட்சிநேர, கட்டண சலுகைகள் வழங்கப்படும்.
29-6-94 புதன் யா/மத்திய கல்லூரிக்கும்,
1-7-94 வெள்ளி யா/வேம்படி மகளிர் கல்லூரிக்கும் பி. ப. 2-00 மணிக்கு விசேட காட்சிகள் காண்பிக்கப்படும்.
(சி-9870)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.